# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,937—1970 දෙසැම්බර් 18 වැනි සිකුරාදා—1970.12.18

14,937 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனிதனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 1147 | ஏலவிற்பனைகளும், குத்தகை விற்பனைகளும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1166 | உத்தியோகத் தொடர்புபற்றிய அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 1186 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1192 | நானாவித அறிவித்தல்கள் | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர் விதித்துள்ள எவற்றுள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

*குறிப்பு.*—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. *யுத்தசேவைச் சலுகை.*—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைச் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. *பிற தேவைகள்.*—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. *தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.*—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. வெ. மு/5/411

## கல்வி அமைச்சு

### யூனிசெவ்வால் (U N I C E F) வழங்கப்படும் மனையியல் புலமைப் பரிசில்கள்—இந்தியா

இந்தியாவில் தெரிவு செய்யப்படும் நிலையங்களில் 1971 ஆம் கழக வாண்டு ஆரம்பத்திலிருந்து மாணிப் பட்டத்துக்கு வழிவகுக்கும் மனையியல் பயிற்சிக்கு யூனிசெவ்வால் அளிக்கபபடும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு பெண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் வகுதிகளில் அடங்குவோர் விண்ணப்பித்தற்கு உரித்திலர் :—

(அ) நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களும் அத்தகைய நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களுமான அரசாங்க ஊழியர்கள்.

(ஆ) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க முனைப்பில் நடைபெறும் இவை போன்ற நிறுவனங்களில் நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களும் அத்தகைய நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களுமான வேலையாளர்கள்.

(இ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பல்கலைக் கழகம் ஒன்றில் கற்கைநெறி ஒன்றினை ஏற்கனவே பின்பற்றும் மாணவர்கள்.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிபபிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

2. **கால எல்லை .**— புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு வருடகால அளவினவாகும் ; அபேட்சகர்களின் தகைமைகளுக்கேற்ப நாலு வருட கால அளவினவாகவும் இவை அமையலாம்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு இந்திய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந் நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தராவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) கீழ்க்காணும் iii (அ) ஆம் பிரிவில் கொடுபட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்கள் 1.3.71 அன்று 22 வயதுககுக் குறைந்தவர்களாயும் iii (ஆ) ஆம் பிரிவில் கொடுபடடுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்கள் 1.3.71 அன்று 24 வயதுக்குக் குறைந்தவராயும் இருக்கவேண்டும்.

(iii) (அ) 4 வருடப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்—

(1) க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் ஒரே தடவை தோற்றி சிங்களம் அல்லது தமிழ், கணிதம் அல்லது எண்கணிதம், இரசாயனவியல், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியுடன் 6 பாடங்களில சித்தி அடைந்திருக்க வேண்டும். மேலும், அபேடசகர்கள் அதே தோற்றத்தில் பின்வரும் பாடங்களில் குறைந்தப்பட்சம் இரணடில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(அ) பௌதிகவியல் (ஈ) தாவரவியல்

(ஆ) உயிரியல் (உ) விலங்கியல்

(இ) மனையியல் (ஊ) உயர்தர அல்லது பிரயோக கணிதம்.

(2) குறித்த தோற்றத்தில் இரசாயனவியலில் அல்லது உயிரியலில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) 2 வருடப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்

(1) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீடசையில் ஒரே தடவை தோற்றி பின்வருவனவற்றுள் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் க. பொ. த (சா. தர) பத்திரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் (" அ ") அல்லது (" ஆ") பாடத்திட்டத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(அ) இரசாயனவியல் (ஈ) விலங்கியல்

(ஆ) பௌதிகவியல் (உ) மனையியல்

(இ) தாவரவியல்

(2) இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் ஒன்றில் திறமைச் சித்தியும் மற்றதில் சாதாரண சித்தியும் பெற்றிருக்க வேண்டும். (இவ்விரு பாடங்களிலும் க. பொ. த (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளவர்களுக்கு இது அமையாது)

(iv) சிங்களத்தில் அல்லது தமிழில் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

குறிப்பு :—1 அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத் தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப் பட்டுள்ள காலத்தைப் பூர்த்திசெய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.3.71 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றிவிண்ணப் பித்தலாகாது.

(2) தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர் களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங் களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர் களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தா லன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைக் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்.

(அ) இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்று புலமைப் பரிசிலைப் பூர்த்திசெய்தபின் திரும்புதற்கான பயணச் செலவு.

(ஆ) மாதாந்தச் சகாயப்படி.

(இ) கல்லூரி விடுதிச்சாலையில் இடவசதி.

(ஈ) பயிற்சி நெறிக்குரிய ஏனைய அவசியச் செலவுகள்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில் விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையினபோது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், இந்தியா வுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்:—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசு வாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும்,

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம் பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங் கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப்பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இந்தியா வில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மானநலன் உடையவராவென பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப் படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக் கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படு தற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

9. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

10. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரி கள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

11. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்த கைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

12. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத் தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

14. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக்கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

15. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படு வார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண் ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
10.12.1970.

12–668—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

இல. : பொ. நி/20/1/70

## கல்வி அமைச்சு

### பண்டசாலைப் பொறுப்பாளர், III ஆந் தர பதவிகள்

கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து, கல்வி அமைச்சி லுள்ள பண்டசாலைப் பொறுப்பாளர், III ஆந் தர பதவிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் இடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்தற்கான கடைசித் திகதியின் பின் பெறுங்கொள்ளப் படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பது விசேட மாகக் கவனிக்கப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூ. 3,000—24 × 90—ரூ. 5,160. (ரூ. 3,810, ரூ. 4,530 ஆகிய வருடாந்தச் சம்பளங்களுக்கு முன் வினைத் திறமைகாண் தடைகள் உண்டு. இவ்வினைத்திறமைகாண் தடைகளுக்கு மேல் உயர்ச்சி அளிக்கப்படுதல் உத்தியோகத்தரின் சேவையையும் ஒழுக்கத்தையும் பொறுத்ததாகும்). (1.10.69 க்கு முன்னரான சம்பள அளவுத்திட்டம் ரூ. 960—24 × 72—ரூ. 2,688 ஆகும். ரூ. 1,608, ரூ. 2,184 ஆகிய வருடாந்தச் சம்பளங்களுக்கு முன் வினைத்திறமைகாண் தடைகள்).

3. **வயதுக் கட்டுப்பாடு.**—விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 22 வயதுக்குக் குறையாதவ ராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

4. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—(i) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ் மொழி, எண் கணிதம்/கணிதம் ஆகியவை உட்பட க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(ii) பண்டசாலைப் பொறுப்பாளராக குறைந்தபட்சம் 2 வருட அனுப வம் பெற்றிருக்க வேண்டும் (அரசினர் தாபனத்தில் அனுபவம் பெற் றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

குறிப்பு.—தொழில்நுட்ப, விஞ்ஞான தாபனங்களில் பண்டசாலைப் பொறுப்பாளராக நியமிக்கப்படுதற்கு, விண்ணப்பதாரிகள் மின்சார, பொறிமுறை உபகரணங்கள் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும். அல்லது க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் பௌதிக வியலில் அல்லது இரசாயனவியலில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

5. **நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். நியமதாரிகள் கைம்பெண், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்:-

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நனகொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) விண்ணப்பதாரிகளின் தகவுத்திறன்—விண்ணப்பதாரியின் ஒழுக்கம் இப்பதவிக்கான தகவுத்திறன் ஆகியவை பற்றிய மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

(**மு. கு.**—ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உப-பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

தொடர்பெண் : பொ. நி/201/70.
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆடு டிசெம்பர் மீ

## மாதிரிப் படிவம்

**பண்டசாலைப் பொறுப்பாளர், III ஆந் தர பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)
(அ) சொந்தப் பெயர் : ————.
(ஆ) ஏனைய பெயர்கள் : ————.

2. அஞ்சல் விலாசம் : ————.

3. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி சரியான வயது :—
வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.

4. இலங்கையராயின் பதிவு காரணமாகவா வம்சாவழி காரணமாகவா ? : ————.
பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.

**குறிப்பு.**—விண்ணப்பதாரியும் அவருடைய தகப்பனும் இலங்கையில் பிறந்திருப்பின் மேற்போந்த (அ), (ஆ) ம் உப-பிரிவுகள் மாத்திரமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரியும் அவருடைய தகப்பனும் இலங்கையில் பிறந்திராவிடின் (அ), (ஆ), (இ), (ஈ) ம் உப-பந்திகள் யாவும் நிரப்பப்பட வேண்டும்.

5. (அ) கல்வித் தகைமைகள் : ————.
(பெற்றுள்ள உயர்தர கல்வித் தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
(ஆ) பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு :—
(1) சிங்களம் : ————.
(2) தமிழ் : ————.
(3) ஆங்கிலம் : ————.

6. அரசினர் சேவையில் உள்ளவராயின் வகிக்கும் பதவியும் திணைக்களமும் : ————.

7. பண்டசாலைப் பொறுப்பாளராக அல்லது பண்டசாலை உதவிப் பொறுப்பாளராகப் பெற்றுள்ள அனுபவம் : ————.
(அத்தகைய அனுபவம் பெற்றிருப்பின் அதனை அத்தாட்சிப் படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

| சேவை புரிந்த தாபனங்கள் | சேவைக்காலம் | | காலம் | | |
|---|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | வரு. | மா. | நா. |
| | | | | | |

மொத்தம் : ————.

8. வேறு யாதேனும் விசேட தகைமைகள் அல்லது பயிற்சி பற்றிய விபரங்கள் : ————.

9. இணைக்கப்பட்டுள்ள மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ளவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.
(நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

10. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12-633—18.12.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கல்வி அமைச்சு

**தொழில் தரத்தில் உப ஓவசியர், II ஆம் வகுப்புப் பதவி**
**(பாடசாலைக் கட்டட வேலைகள்)**

பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து, கல்வி அமைச்சின் பாடசாலைக் கட்டட வேலைகள் பிரிவில், தொழில் தரத்திலுள்ள உப-ஓவசியர், II ஆம் வகுப்புப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.—(அ) கொழும்பிலும் எந்திரவியல், தொழிற்சாலை நிலையங்களாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களிலும் சேவை புரிபவர்களுக்கு திரட்டிய சம்பள விகிதம்**—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 8.00 வீதமும் அதன் பின்னர் ரூ. 2,640—60 × 15—3,540 வருடாந்தம்.

**1.10.69 க்கு முன்னரான சம்பள விகிதம்.**—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 2.30 வீதமும் அதன் பின்னர் ரூ. 750—42 × 13—1,296 வருடாந்தம்.

**(ஆ) எந்திரவியல், தொழிற்சாலை நிலையங்களாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு.**

**திரட்டிய சம்பள விகிதம்.**—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 7.60 வீதமும் அதன் பின்னர் ரூ. 2,640—60 × 10—3,240 வருடாந்தம்.

**1.10.69 க்கு முன்னரான சம்பள விகிதம்.**—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 2.10 வீதமும் அதன் பின்னர் ரூ. 750—42 × 8—1,096 வருடாந்தம்.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரிகள் உபகாரச் சம்பள உரிமை அந்தஸ்து 7.2.64 ஆந் திகதிய 633 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமையும். மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில்

வைக்கப்பட்டதும் உபகாரச் சம்பள உரிமை அந்தஸ்து பெறப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். உபகாரச் சம்பள உரிமை அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி அரசாங்க சேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப் படுவாராயின், அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு—

(அ) தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(ஆ) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு அமைய ஒழுக வேண்டும்.

(iii) இந்நியமனம் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிதிப் பிரமாணங்கள், வியவகாரச் சங்கிரக முறை விதிகள், திணைக்களக் கட்டளைகள் அல்லது பிரமாணங்கள், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு யாதேனும் கட்டளைகள் அல்லது பிரமாணங் கள் ஆகியவற்றிற்கு அமையும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) ஆட்சேர்ப்பு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும். தெரிவும் நியமனமும் செயல்முறைப் பரீட்சையில் தகைமை பெறுபவர்களின் முதுமுறைக்கமைய நடாத்தப் படும்.

4. **வயதெல்லைகள்.**—விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடை சித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

5. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—(அ) (i) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) பதிவுச் சுவடிகளை வைத்திருக்கக்கூடியவராயும் குறுகிய அறிக்கை கள் எழுதக்கூடியவராயும் இருக்க வேண்டும்.

(iii) இலகுவான வரைதல்களை விளக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iv) அளவைத் தொழிலாளராகக் குறைந்தபட்சம் 9 வருட சேவை புரிந்திருப்பதுடன் அளவைத் தொழிலாளர் தொகுதி ஒன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத சேவையும் புரிந்திருக்க வேண்டும்.

(v) தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தக் கூடியவராய் இருக்கவேண்டும்.

(ஆ) மேலுள்ள (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுடன் கீழ் காணும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும். இந்தகைமைகள் முன்னுரிமைக் கிரமப்படி கொடுபட்டுள்ளன.

(1) **கல்வி அமைச்சுக் காரியாலயத்திலும் இவ்வமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களிலுமுள்ள வேலையாளர்களைப் பொறுத்த வரையில்.—**

(அ) III ஆம், IV ஆம் வகுப்புகளில் குறைந்தபட்சம் 5 வருட சேவை ; இதில் 3 வருட சேவை III ஆம் வகுப்பிலாக இருக்க வேண்டும்.

(ஆ) IV ஆம் வகுப்பில் முன்னைய சேவையுடன் III ஆம் வகுப் பில் 3 வருடங்களுக்குக் குறைந்த சேவை உடைய, III ஆம் வகுப்பில் புரிந்த ஒரு வருட சேவையை IV ஆம் வகுப்பில் புரிந்த இரண்டு வருட சேவையாகக் கணிப்பதனுல—III ஆம், IV ஆம் வகுப்புகளில்— மொத்தம் 8 வருட சேவை புரிந்த வேலையாளர்கள்

அல்லது

(இ) (அ) தொழில் பயில்வோனுக III ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் 3 வருட சேவை.

(ஆ) தொழில் பயில்வோனுக III ஆம் வகுப்பில் 6 வருட சேவையுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் II ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் 2 வருட சேவை (அங்கீ காக்கப்பட்ட நிலையங்களில் புரிந்த சேவை சான்றிதழ் களால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்)

அல்லது

(ஈ) IV ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 8 வருட சேவை புரிந்த வேலையாளர்கள்

அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில், இப்பதவிக்குப் பொருத் தமுடைய ஒரு பதவியில் 5 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்துள்ள வேலையாளர்கள் இவ்வகுதியில் அடங்கும் வேலையாளர்களின் விண்ணப்பங்கள் மேலுள்ள (அ) ஆம், (ஆ) ஆம், (இ) ஆம், (ஈ) ஆம் வகுதிகளின் கீழ் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப் படாதவிடத்து மட்டுமே சீர்தூக்கப்படும்.

(முன்னைய சேவை சான்றிதழ்களினுல் அத்தாட்சிப் படுத்தப்படவேண்டும்).

(2) **பிற விண்ணப்பதாரிகள்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் II ஆம் வகுப்பில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் (சான்றிதழ்களினுல் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்).

(ஆ) சிறந்த நலவொழுக்கம் (பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து குணச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

**குறிப்பு.**—(1) ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் வேலையாளராகப் புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் புரிந்த சேவையாகக் கணிக்கப்படும்.

(2) கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் அல்லது இவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் உள்ள வேலையாளர்களுள் தகுதியுடைய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து மட் டுமே பிற அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப் படும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் கீழே குறிப்பிடப் பட்டுள்ளவற்றின் பிரதிகளை (மூலப்படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்ட நோக்கங்களின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) மேலுள்ள 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவ றும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

7. மேலுள்ள 5 ஆம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமைகளுக் கிணங்கத் தகுதியுடைய, அரசினர் சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்கள/நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப் படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் திணைக்கள/ நிலையத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டு தாமதத்துக்குத் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டு அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்கள/ நிலையத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. இவ்வர்த்தமானியில் I ஆம் பகுதி (II) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட் டுள்ள, அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறி விக்கப்படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 9 ந் உ.

## மாதிரிப் படிவம்

### கல்வி அமைச்சில் தொழில் தரத்திலுள்ள (பாடசாலைக் கட்டட வேலைகள்), உப ஓவசியர், II ஆம் வகுப்புப் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.

2. நிரந்தர விலாசம் (தெளிவாக எழுதவும்) : ————.

3. சொந்த இடம் : ————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது —
வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.
பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

5. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் : ————.

பின்வருவோர் பிறந்த இடம் : ————.

(1) விண்ணப்பதாரி : ————.

(2) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.

(3) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.

(4) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.

6. விண்ணப்பதாரி விவாகம் செய்தவரா ? செய்யாதவரா ? தார மிழந்தவரா ? : ————.

7. கல்வித் தகைமைகள் : ————.

(1) பொது : ————.

(2) அறிவித்தலின் 5 ஆம் பந்தி (அ) ஆம் உப-பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் சம்பந்தமான அனுபவமும் தராதரப் பத்திரங்கள் பற்றிய விபரங்களும் : ————.

(3) சிங்களத்தில்/தமிழில் சித்தி அடைந்த அதி உயர்ந்த பரீட்சை : ————.

8. அறிவித்தலின் 5 ஆம் பந்தி (ஆ) ஆம் உப-பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை பற்றிய விபரங்கள் : ————.
(சேவை புரிந்த நிலையங்கள், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகிய விபரங்கள் கொடுபட வேண்டும்.)

9. மேலதிக விசேட தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.

10. பாடசாலையிலிருந்து விலகியபின் வகித்த உத்தியோகங்கள் : ————

(1) வகித்த பதவி : ————.

(2) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

(3) விலகியதன் காரணம் : ————.

11. அரசினரின் கீழ் அல்லது உள்ளூராட்சிச் சபை ஒன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், அத்தகைய சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்கள் : ————.

(அ) வகித்த உத்தியோகம் : ————.

(ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

(இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணம் : ————.

12. தற்போதைய உத்தியோகம் : ————.

(1) நிலையத்தின் பெயர் : ————.

(2) பதவிப்பெயரும் தரமும் : ————.

(3) நியமனத் திகதி : ————.

(4) பதவி இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிக மானதா, சுயயோசிதமா ? : ————.

(5) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் : ————.

(6) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

13. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின்—

(அ) திகதி : ————.

(ஆ) வழக்கு இலக்கம் : ————.

(இ) குற்றத்தின் தன்மை : ————.

14. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு : ————.

15. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா, அங்ஙன மாயின் விபரங்களைக் கொடுக்கவும் : ————.

16. யுத்த சேவையிலிருந்து விலகியவராயின்—

(அ) படைக்கூற்றின் பெயர் : ————.

(ஆ) வகித்த பதவி : ————.

(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு கொடுபட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், நியமனத்துக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் நஷ்ட ஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப் படுத்தல்

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி/30/204

நி. செ.

கல்வி அமைச்சு.

இவ்விண்ணப்பம் இக்காரியாலயத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்குப் பின்/முன்* பெற்றுக் கொள்ளப்பட்டது.

.............. ஆம் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்களுக்கு அமைபவை*. அனுப்பப்படுகின்றது.

————,
திணைக்கள/நிலையத் தலைவரின் ஒப்பம்.
திகதி : ————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

12–631—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல, 14,937

---

## உத்தியோகத்தர் வெற்றிடங்கள்—இலங்கை அரச கடற்படை

இலங்கை அரச கடற்படையில் பின்வரும் கிளைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) நிறைவேற்று கிளை

(ஆ) எந்திரத்தொழிற் கிளை :—
 (i) கடற்றுறை எந்திரத்தொழில்
 (ii) சிவில் எந்திரத்தொழில்

(இ) மின்சாரக்கிளை

(ஈ) வழங்கற்கிளை

(உ) வழங்கற்கிளை (சட்டம்)

2. தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் 11 ஆம் பந்தியிற் குறிப்பிட்டவாறு இலங்கை அரச கடற்படையின் ஒழுங்கான கப்பற்படையின் ஒழுங்கான ஆணைகள் வழங்கப்படுவர்.

3. தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இலங்கையில்/வெளிநாட்டில் பயிற்சிபெற வேண்டப்படுவர்.

4. **சம்பளமும் படிகளும்.**—காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ளதும், 1961 ஏப்பிரல் 28 ஆம் திகதிய 12,395 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்கு அவர் தமது பதவிக்குரிய சம்பளமும் படிகளும் நியமிக்கப்படும் காலத்தில் கொடுக்கப்படுவர். இச்சம்பளக் கோவை பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் இசைவாக்கிக் கொள்ளப்படும் விதமாக ஆயுதந்தாங்கிய படைகளின் சம்பளக் குழுவின் விதப்புரைகளுக்கு இணங்கப் பின்னர் திருத்தப்படும்.

(அ) எவுநர் பதவி வரையுள்ள உத்தியோகத்தருக்குக் கொடுக்கப்பட்டு வரும், ஆயுதந்தாங்கிய படைகளின் சம்பளக் குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட ஒன்று திரட்டிய சம்பள விகிதங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| உதவித்துணைநிலை அலுவலர் : | ஆண்டொன்றுக்கு ரூபா 7,500 தொடங்கி ரூபா 180 கொண்ட ஐந்து ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 8,400 வரை ; |
| துணைநிலை அலுவலர் .. | ஆண்டொன்றுக்கு ரூபா 9,240 தொடங்கி ரூபா 180 கொண்ட 8 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 10,680 வரை ; |
| துணைநிலை எவுநர் .. | ஆண்டொன்றுக்கு ரூபா 11,400 தொடங்கி ரூபா 240 கொண்ட 8 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 13,320 வரை ; |
| எவுநர் .. .. | ஆண்டொன்றுக்கு ரூபா 15,000 தொடங்கி ரூபா 360 கொண்ட 7 ஆண்டுப் படியுயர்வுகள் மூலம் ரூபா 17,520 வரை. |

(ஆ) பின்வரும் படிகளும் கொடுபடற்பாலன :—

(i) தகைமைச் சம்பளம் கடற்படைச் சம்பளக் கோவையில் ஏற்பாடு செய்யப்பட்ட விதமாகச் செலுத்தப்படும் ;

(ii) கோலவுடைப்படி பின்வருமாறு செலுத்தப்படும் :—
வெப்ப மண்டலப் பிரதேசத்துக்கான கோலவுடைக்கென ஆரம்பக் கொடையாக ரூபா 1,000 ; அத்துடன் மாதமொன்றுக்கு கோலவுடை பேணற்கான படி ரூபா 25.

(iii) வேறு படிகள்—திருமணமானவரானால், அரசாங்க விகிதாசார திருமணப்படி வழங்கப்படும். பிரிவுகாலப்படி, திரண்ட படி, ஏவலாளர் படி என்பன கடற்படைச் சம்பளக் கோவையில் விதிக்கப்பட்டவாறு வழங்கப்படும் ;

(இ) திருமணமானவர்களானால், தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் திருமணமானவர்களுக்கான குடிமனை (கிடைக்கும் வாய்ப்பைப் பொறுத்து) பெற உரித்துடையவராவர். தனியானவர்களானால் உணவுச்சாலை வசதியும் ஏவலாளர் சேவைகளும் கிடைக்கும்.

5. சேவை நிபந்தனைகள் :

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ளனவும், 1950 டிசெம்பர் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியீட்டில் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளினால் சேவை நிபந்தனைகள் ஆளப்படும். உதவித் துணைநிலை அலுவலர் ஒருவர், உதவித் துணைநிலைப் பதவியில் நான்கு ஆண்டு சேவையை முடிக்கும் பொழுது, கடற்படைத் தளபதியினால் விதிக்கப்படும் பயிற்சிநெறி ஒன்றினையும் பரீட்சையையும் வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு அமைய, சாதாரணமாக துணைநிலை அலுவலர் பதவிக்கு உயர்வு பெறுவர். துணை நிலை அலுவலர் ஒருவர் துணைநிலைப் பதவியில் 8 ஆண்டுகால சேவையை முடிக்குமிடத்து, கடற்படைத் தளபதியினால் விதிக்கப்படும் பரீட்சையிற் சித்தியடைவதற்கு அமைய, துணைநிலை ஏவுநர் பதவிக்கு உயர்வு பெறுவர். ஏவுநர் பதவிக்கான பதவி உயர்வு தெரிவு மூலம் செய்யப்படும். பதவி உயர்வு வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் முதலியன பற்றி மேலும் தகவல் விரும்புவோர் கடற்படைத் தளபதி, தலைமை அலுவலகம், இலங்கை அரச கடற்படை, அஞ்சற் பெட்டி இல. 693, கொழும்பு என்ற முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ளதும் 1962 டிசெம்பர் 7 ஆம் திகதிய 13,423 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1962 ஆம் ஆண்டின் கடற்படை ஓய்வூதியங்களும் மிகையூதியங்களும் சம்பளக் கோவையின் நியதிகளுக்கிணங்க ஓய்வூதியங்கள்/மிகையூதியங்கள் வழங்கப்படும்.

7. இலங்கை அரச கடற்படை உத்தியோகத்தர்கள் எந்நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திலேனும் கடமையில் அல்லது பயிற்சிக்காக நிறுத்தப்படக்கூடும்.

8. தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள், படைச்சேவை விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவுக் கட்டுப்பணமாகத் தமது திட்ட அடிப்படைச் சம்பளத்தில் 4 சதவீதத்தைக் கழிக்கச் சம்மதமளிக்கும் எழுத்திலான அறிவித்தலை வழங்க வேண்டப்படுவர்.

9. புதிதாகச் சேர்பவர்கள் அரசாங்க மொழிக் கொள்கைக்குப் பயன் அளிப்பதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமென இது வரை ஆக்கப்பட்டனவும் இனிமேலாக்கப்படக் கூடியனவுமான எவையேனும் விதிகளுக்கு இணங்க ஒழுகப் பணிக்கப்படுவார்கள்.

10. அடிப்படைத் தேவைகள் :

அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றல் வேண்டும் :—

(அ) நாட்டினம்—அபேட்சகர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்,

(ஆ) கடற்படையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் வைத்தியச் சோதனைத் தரத்தில் அபேட்சகர்கள் நியமனத்திற்கு முன்னர் சித்தியெய்துமபடி வேண்டப்படுவர்.

11. கல்வி/தொழில் முறை :

அந்த அந்தக் கிளைக்கு வேண்டும் தகைமைகளைத் தாம் கொண்டுள்ளார் என அபேட்சகர் திருப்தியான சான்று அளித்தல் வேண்டும்.

## நிறைவேற்று கிளை

(அ) கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும் :—

அபேட்சகர்கள்—

(i) க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் இரண்டில் சிறப்பான சித்தியுடன் சித்தியடைந்திருக்க வேண்டும் :

தூய கணிதம்,
பிரயோக கணிதம்,
பௌதிகம்,
இரசாயனம்.

அல்லது

(ii) மேற்சொல்லப்பட்ட பாடங்களில் அதனிலும் உயர்ந்த கல்வித் தகைமையுடையவராயிருத்தல் வேண்டும்.

(iii) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 24 வயதுக்குக் கூடாதவராயும் திருமணமாகாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் உதவித் துணைநிலைப் பதவியில் ஒழுங்கான ஆணை வழங்கப்பெறுவர்.

## எந்திரத் தொழிற் கிளை

### கடற்றுறை, பொறியியல் எந்திரத் தொழில்

(அ) கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும் :—

அபேட்சகர்கள்—

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரத்தொழிற் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். இறுதிப்பரீட்சைக்கு எடுக்கப்பட்டனவும் சித்தியடையப்பட்டனவுமான பாடங்களுள் எந்திரச் செயற்பாடு அல்லது கடற்றுறை எந்திரத் தொழிலில் சிறப்பாற்றல் எய்தற்கான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் விரும்பத்தக்கது,

அல்லது

(ii) (இலண்டன்) எந்திரச் செயற்பாட்டு எந்திரவியல் நிறுவனத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்,

அல்லது

(iii) (இலங்கை) எந்திரவியல் நிறுவனத்தின் பட்டதாரியாகவும் மேலே (ii) இல் தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளை அல்லது அவற்றுக்குச் சமமானவற்றையுடையவராயிருத்தல் வேண்டும்,

(iv) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 32 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் துணைநிலை அலுவலர் (எ) பதவியில் ஒழுங்கான ஆணை வழங்கப்படுவர்.

## எந்திரத் தொழில் கிளை

### சிவில் எந்திரத் தொழில்

(அ) கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும்:—

அபேட்சகர்கள்—

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் எந்திரத் தொழிற் பட்டதாரியாகவும், அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சிவில் எந்திரத் தொழில் குழுமத்தில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு அனுபவம் உடையவராயுமிருத்தல் வேண்டும்,

அல்லது

(ii) (இலண்டன்) சிவில் எந்திரவியலாளர் நிறுவனத்தில் கூட்டிணைவு உறுப்பாண்மை பெற்றவராயிருத்தல் வேண்டும்,

அல்லது

(iii) சிவில் எந்திரத் தொழில் சிறப்பாற்றல் மூலம் அத்தகைய தொழிலில் ஆகக் குறைந்தது 2 ஆண்டு அனுபவத்துடன் (இலங்கை) எந்திரவியலாளர் நிறுவனத்தில் கூட்டிணைவு உறுப்பாண்மை பெற்ற வராயிருத்தல் வேண்டும்,

(iv) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 32 வயதுக்கு மேற்படாதவராகவிருத்தல் வேண்டும்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் துணைநிலைப் பதவியில் ஒழுங்கான ஆணை வழங்கப்படுவர்.

## மின்சார எந்திரத் தொழிற் கிளை

(அ) கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும் :—

அபேட்சகர்கள்—

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரத்தொழிற் பட்டதாரியாகவிருத்தல் வேண்டும். இறுதிப்பரீட்சைக்கு எடுக்கப்பட்டனவும் சித்தியடையப்பட்டனவுமான பாடங்கள் மின்சாரத் தொழிற் சிறப்பாற்றலோடு சம்பந்தப்பட்டனவாதல் வேண்டும்,

அல்லது

(ii) (இலண்டன்) மின்சார எந்திரவியலாளர் நிறுவனத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்,

அல்லது

(iii) இலண்டன் எலக்ரோனிக், வானொலி எந்திரவியலாளர் நிறுவனத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்,

அல்லது

(iv) (இலண்டன்) சிற்றி அன் கைல்ஸ் இறுதிப்பரீட்சையில், மின் சார எந்திரத் தொழிற் பயிற்சிகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

குறிப்பு.—மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடையவர்களும், வலுவிசை மின்சார எந்திரத் தொழிலில் அல்லது வானொலி, எலக்ரோனிக் வேலையில் கப்பலின் மின்சார சாதனங்களை (செயற் பயிற்சிக் காலமுட்பட) அனுபவமுள்ளவர்களுமான அபேட்சர்க்கு சலுகையளிக்கப்படும்.

(v) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 32 வயதிற்குக் கூடாத வராக இருத்தல் வேண்டும்,

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் அவர்களின் தகைமையினைப் பொறுத்து உதவித் துணைநிலை அலுவலர்/துணைநிலை அலு- வலர் பதவிகளில் ஒழுங்கான ஆணைகள் வழங்கப்படுவர்.

### வழங்கற் கிளை

(அ) **கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும் :—**
அபேட்சகர்கள்—

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்,

(ii) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 24 வயதுக்கு மேற்படாத வராயும் திருமணம் செய்யாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் உதவித்துணைநிலைப் பதவி யில் ஒழுங்கான ஆணை வழங்கப்படுவர்.

### வழங்கற் கிளை (சட்டம்)

(அ) **கல்வி/தொழில் முறைத் தகைமைகளும் வயதும் :—**
அபேட்சகர்கள்—

(i) இலங்கை உயர்நீதிமன்றத்தின் வழங்குரைஞர்களாக அல்லது வழங்கறிஞர்களாக இருத்தல் வேண்டும்,

(ii) 1971 சனவரி 20 ஆம் திகதியன்று 28 வயதுக்கு மேற்படாத வராயிருத்தல் வேண்டும்,

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் துணைநிலைப் பதவியில் ஒழுங் கான ஆணை வழங்கப்படுவர்.

**விண்ணப்பகாரர்களுக்கு அறிவுறுத்துரைகள்**

**12.** விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுக்கான (அ) என்னும் பின் னிணைப்பில் தோன்றும் மாதிரிப் படிவத்தில் செய்யப்பட்டு 1971 சனவரி 20 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியனவாகக் கடறபடைத் தளபதி, கடைறபடைத் தலைமை அலுவலகம், அஞ்சற் பெட்டி இல. 593, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கிய உறை " உத்தியோகத்தர் பதவி " எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை அறிவிக்கப்படும்.

**13.** அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், திணைக்கள அல்லது கூட்டுத் தாபனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் உத்தியோகத்தர் தெரியப்படின் அவர் அங்கிருந்து விடுவிக்கப்படுவார் என்னும் சானறிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**14.** விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகள் இணைக்கப் படல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரை நேரில் நன்கறிந்தவரான பொறுப்புவாய்ந்த வர்களிடமிருந்து பெறப்பட்ட (ஆகக் குறைந்தது) இரண்டு சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—வழங்கற்கிளைச் சட்டத்துக்கான விண்ணப்பகாரர் விடயத்தில் ஒரு சான்றிதழ் அபேட்சகர் தமது தொழிலை எந்த நீதியலுவல ரின் முன் புரிந்து வந்தாரோ அவ்வலுவலரிடமிருந்து பெறப் பட வேண்டும்.

**15.** குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து ஆரம்பத் தெரிவு ஒன்று செய்யப்படும். ஆரம்ப நேர்முகப் பரீட்சையில் தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள், கடற்படைச் சேவைக்கு அவர்கள் தகுதியானவர்களெனக் கண்டு கொள்வதற்கென விசேட சார்புத் தேர்வு ஒன்றுக்குத் தோற்றும்படி பணிக்கப்படுவர். அதன் மேல் பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரினல் நியமிக்கப் படும் தெரிவுச் சபை ஒன்றினல் நேர்முகப் பரீட்சை ஒன்றன் மூலம் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப் படும் அபேட்சகர்கள் அத்தகைய நேர்முகப் தேர்வுக்கான இடம், நேரம், தேதி என்பனபற்றி வர்த்தமானியில் அறிவிக்கப்படும். இது தொடர்பில் போக்குவரத்து அல்லது வேறு செலவுகள் எவையும் இலங்கை அரசாங் கத்தினல் கொடுக்கப்பட மாட்டா.

டீ .வீ. ஹன்ரர்,
கொமடோர்,
பதிற் கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமை அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 8 ந் உ.

பின்னிணைப்பு " அ "

**உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்**

**இலங்கை அரச கடற்படை**

1. கிளை :————.

2. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

3. நாட்டினம் (வம்சாவழியாகவா அல்லது பதிவுமூலமா இலங்கைப் பிரசை எனக் கூறி, பின்னையதானல் சான்றிதழின் இலக்கத்தை யும் திகதியையும் குறிப்பிடுக) :————.

4. முகவரி :—
(அ) வதிவிட :————.
(ஆ) அலுவலக :————.

5. பிறந்த திகதி :————.
1971 சனவரி 20 ஆம் திகதி வயது— ஆண்டு :————, மாதம் :———— நாள் :————.

6. பெயர், பிறந்த இடம், இப்போதைய முகவரி என்பன :—

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | இபபோதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

7. நீர் திருமணமானவரா தனியாளா?

8. பாடசாலையில், பல்கலைக் கழகத்தில் அல்லது சட்டக்கல்லூரியில் என்ன விளையாட்டுச் சிறப்புகள் பெற்றுள்ளீர் :————.

9. பாடசாலையில், பல்கலைக்கழகத்தில் அல்லது சட்டக்கல்லூரியில் உமக்குச் சிறப்புத் தரவல்ல குறிப்பிடத்தக்க ஏனைய பேறுகள் என்ன :————.

10. ஆயுதந்தாங்கிய படைகளில், " கடற்று " அணியில், அல்லது ஆண்கள் சாரணர் தாபனங்களில் உமக்குள்ள முற்காலச் சேவை என்ன :————.

11. இந்நியமத்துக்கென உமக்குள்ள வேறு சிறப்புத் தகைமைகள் : ————.

12. ஆயுதந்தாங்கிய படைகளுள் எதற்கேனும் நீர் முன்னர் விண்ணப் பஞ் செய்துள்ளீரா, அப்படியாயின், அதன் பலன் என்ன :———.

13. உமது பாடசாலை, பல்கலைக்கழக அல்லது சட்டக்கல்லூரிக் காலம் பற்றிப் பின்வரும் விபரங்களைத் தருக :—

| பாடசாலை/பல்கலைக் கழக கம்/சட்டக்கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சித்தியெய்திய பகி ரங்கச் சோதனை |
|---|---|---|---|
| | | | |

14. பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது சட்டக் கல்லூரி விட்டு நீங்கியதி லிருந்து உமது தொழில் முயற்சி பற்றிய பின்வரும் விபரங் களைத் தருக :—

| வேலைக்கமர்த்தியவரின் பெயர் | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

15. குணநலம் பற்றிச் சான்றிதழ்கள் பெறப்பட்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் :—
1 :————.
2 :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

12—598—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

## இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம்

### வாகடர் பதவி (இரச தயாரிப்பு)

இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் ஆயுர்வேத மூலிகைத் தொழிற்சாலைக்கு வாகடர் பதவிக்கு (இரச தயாரிப்பு) விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினைப் போலத் தயாரித்து 15.1.1971 ல் அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ என்னை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும்.

2. **வேதன விகிதம்.**—இந் நியமனத்துக்கான திரட்டிய மாதாந்தச் சம்பளம் ரூபா 478— 6 × 12, 8 × 15, 6 × 20—790

3. **சேவை நிபந்தனைகளும், நியமன விதிகளும்.**—
(i) இப்பதவி நிரந்தரமானதும்,
(ii) ஊழியர் சேமலாப நிதிக்கு தொகை செலுத்தப்படுதல் வேண்டும்,
(iii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் சொந்த மருத்துவச் சேவையில் ஈடுபடும் உரித்துடையரராகார்.

4. **கல்வி மற்றும் ஏனைய தராதரங்கள்.**—ஒவ்வோர் அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும். :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேதக் கல்லூரியின் டிப்பிளோமோ பெற்றவராயும், ஒரு வருடம் வைத்தியசாலையில் பயிற்சியினை முடித்தவராயும் அல்லது ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட மருத்துவச் சேவை உடையவராயும் ; அல்லது ;
ஆயுர்வேத வைத்தியராகப் பதிவுசெய்யப்பட்டு 10 வருடத்திற்குக் குறையாத பொது மருத்துவராக அனுபவமுடையவராயும் ;

(ஆ) இரசத் தயாரிப்புக்களில் விசேட அறிவும், திறமையும் இருப்பது அவசியம். இப்பிரிவில் பரம்பரையாக அனுபவமுடையவர்க்கு சலுகை வழங்கப்படும்.

(இ) 15.1.71 ல் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் :—
(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;
(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழும், உயர் தொழிற் சான்றிதழும் ;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட இரு குணச் சான்றிதழ்.

செயலாளர்,
இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம்.

த. பெ. இல : 807,
207/3, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7.
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 8 ந உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம்

### வாகடர் பதவி (இரச தயாரிப்பு)

1. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) : ————.
(அ) சொந்தப் பெயர் : ————.
(ஆ) வேறு பெயர்கள் : ————.

2. தபால் விலாசம் : ————.

3. பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்).
15.1.1971 ல் சரியான வயது : —.
வரு. : ————. மா. : ————. நா. : ————.

4. இலங்கைச் சாதியமா அல்லது : ————.
வம்சாவழிச் சாதியமா அல்லது பதிவுச் சாதியமா : ————.

5. உயர் கல்வித் தகைமைகள் : ————.
(பிரதிகள் இணைத்தல் வேண்டும்).

6. வைத்தியப் பட்டதாரியாயிருப்பின் உயர் தொழிற் தகைமையினைக் குறிப்பிடுக : ————.
(பிரதிகள் இணைத்தல் வேண்டும்).
(1) டிப்பிளோமோவின் பெயர் : ————.
(2) டிப்பிளோமோ பெற்ற வருடம் : ————.
(3) வகுப்பு : ————.
(4) நிறுவனம் : ————.

7. இரச தயாரிப்பில் பரம்பரை அனுபவமும் அறிவும் : ————.

8. இரசத் தயாரிப்புக்குரிய அறிவும், திறமையும், இம்மருத்துவத் துறையில் பரம்பரையான அனுபவமும், குறிப்புகளும் : ————.

இவ் விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றியும் விலக்கப்படுவதற்கு நான் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

12–686—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,397

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

மாத்தறை மாவட்டத்தில் உள்ள கிராம சேவகர் சேவைப் பிரிவிலுள்ள வெற்றிடங்களுக்கு கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **வெற்றிடங்கள்.**—ஒவ்வொரு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவிலும் நிரப்பப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வெள்ளபடபத்துவும் நான்கு கிறவற்சும் .. | ஒன்று |
| வெலிகம் கோறளை .. .. | ஒன்று |
| கங்கபட பத்துவ .. .. .. | ஒன்று |
| கந்தபட பத்துவ .. .. .. | ஒன்று |
| மொறவக்கோறளை மேற்கு .. .. | ஒன்று |

3. **சம்பளம்.**—கீழேயுள்ள 8 (iii) (ஜீ) பந்தியில் விதிக்கப்பட்ட பயிற்சிக்காலத்தைப் பூர்த்தி செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் ஆண்டொன்றிற்கு 3,000 ரூபா சம்பள வீதம் ஆண்டு தோறும் 90 ரூபா சம்பள உயர்வுகளுடன் 5,160 ரூபாவாக உயரும் திரட்டிய சம்பளத்தில் நியமிக்கப்படுவர். இந்த அளவுத்திட்டத்தில் 3,810 ரூபாவிற்கு முன்னர் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை ஒன்று நடைபெறும்.

4. **தகைமை.**—(1) பரீட்சார்த்திகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராயிருத்தல் வேண்டும். அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் எல்லா நோக்கங்களின் பொருட்டு " இலங்கையர் " என்னும் சொல் வம்சா வழியாக அல்லது பதிவு வழியாக இலங்கைப் பிரசையாக இருப்பவர் எனப்பொருள்படும்.

(3) பரீட்சார்த்திகள் ஒரு கிராமசேவகரின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய உடல் நலமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள்.—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தியடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது குறைந்தது இரண்டிலாயினும் திறமைச்சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத்தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் 1971 ம் ஆண்டு ஜனவரி 18 ஆந் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வயதிற்குக் கூடியவர்களாகவோ இருத்தலாகாது. அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை, கணிக்கப்படமாட்டாது.

(6) பரீட்சார்த்திகள்.—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தர

மாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக. இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச்சான்றிதழ்களின் மூலம் சான்று படுத்தல் வேண்டும் ; அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச்சான்றிதழ் இதற்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு.**—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில் பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

**5. தெரிவு செய்யும் முறை.**—நியமனத்திற்கான பரீட்சார்த்திகள், கீழே 7 ம் பந்தியில் விதிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் காட்டிய செயல் திறனுடன், கீழே 6 ஆம் பந்தியில் விபரித்தவாறு சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் அல்லது தரவாரி முறையின் பேரிலான உயர்தரப்பரீட்சையில் பெற்ற தரங்களின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

**6. தரவாரித்திட்டம்.**—சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் பெறபபட்ட தரங்களின் பொருட்டு ஒதுக்கப்படும் புள்ளிகள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| டீ—விசேட சித்தி .. | .. | .. | 75 புள்ளிகள் |
| சீ—திறமைச்சித்தி | .. | .. | 50 புள்ளிகள் |
| எஸ்—சாதாரண சித்தி | .. | .. | 40 புள்ளிகள் |

ஆறுக்கு மேற்பட்ட பாடங்களில் தோன்றிச் சித்திபடைந்தவர்கள் ஆறு பாடங்களுக்கு மாத்திரம் தோன்றிச் சித்திபடைந்தவர்கள் பெறும் மொத்தப்புள்ளிகளிலும் பார்க்கக் கூடுதலாகப் பெறும் மொத்தப் புள்ளிகளைத் தவிர்த்தற் பொருட்டுப் பரிசிலனை செய்யப்பட வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை விண்ணப்பத்தில் ஆறு பாடங்கள் என வரையறுக்கப்படும்.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தி அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒருவர் மேலதிகமாக 30 புள்ளிகள் பெற உரித்துடையவராவர். எனினும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குக் குறைவாகச்சித்திபடைந்தவர்களுக்கு அல்லது திறமைச்சித்திகள், விசேட சித்திகள் முதலியன போன்று இப்பாடங்களிற் பெறப்பட்ட தரத்தின் பொருட்டுப் புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்பட மாட்டாது. இளங்கலைஞர் அல்லது ஏதாவது உயர்ந்த பட்டம் பெற்றவர்களுக்கு மேலதிகமாக 70 புள்ளிகள் கொடுக்கப்படும். இது. க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மேலதிகமாக 30 புள்ளிகளையும் உள்ளடக்கும். இளம் கலைஞர் பட்டத்தை உடைய பரீட்சார்த்திகள் க. பொ. த. (உயர்தரம்) திற்காக மேலதிகப்புள்ளிகள் ஒதுக்கப்படமாட்டாது. இங்கு குறிப்பிடாத ஒன்றிற்கு மேற்பட்ட பட்டம் அல்லது ஏதேனும் கல்வித்தகைமையின் பொருட்டு மேலதிக புள்ளிகள் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட தரவாரியன திட்டத்திற்கு இணங்க விண்ணப்பப்படிவத்தில் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூடுகளில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைத்தரப்பட வேண்டும்.

**7. நேர்முகப்பரீட்சை.**—(i) 100 புள்ளிகளைக்கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும். கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சாத்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப்படையின் கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன்பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகளின் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித்திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

**உதாரணம்.**—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக்குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய | .. | .. | 75 |
| 6—10 | .. | .. | 120 |
| 11—15 | ... | ... | 150 |
| 16—20 | ... | .. | 160 |
| 21—25 | .. | .. | 175 |
| 26—30 | .. | .. | 180 |
| 31—35 | .. | .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் மூலப் பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதி பெற்றவராக பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாது விடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

**8. சேவை நிபந்தனைகள்.**—(i) அரசாங்க வர்த்தமானி பகுதி I, பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(ii) பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையனவாகும். விதவைகள் அநாதையர் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு உதவு தொகைகள் செலுத்தப்படவேண்டும்.

(iii) அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அரசாங்க சேவைக்குப் புதியவராக இருப்பின்—

(அ) அவருடைய தகுதி காண் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தினதும், அரசாங்க அரசகரும மொழிக்கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கும் அமைய இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்கு உட்படுதல் வேண்டும்.

(இ) தகுதி காண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—தொழில் ஆற்றும் அறிவை அவர் பெறல் வேண்டும்.

(ஈ) தகுதி காண் கால முடிவில் அவரது வேலையை உறுதிப்படுத்தல் பிறவற்றுக்கிடையில் அவர் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரச் சிங்களத்தேர்ச்சிச் சோதனைகளை முறையே நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுக்கிடையில் (அல்லது பொருத்தமான போது 1 ஆம், 2 ஆம் தரங்களை முறையே ஒரு வருடத்திலும் இரண்டு வருடத்திலும்) அவர் சித்தியெய்துவதிலேயே தங்கி உள்ளது.

விதிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் இத்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத்தவறின் ஆண்டேற்றங்கள் இடை நிறுத்தப்படும், விதிக்கப்பட்ட காலத்திற்கு மேலும் ஆறு மாதகாலத்திற்குள் சோதனையில் சித்தியடையாவிட்டால் இடை நிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும். அப்படியான நிறுத்தம் சிங்களத்தேர்ச்சிச் சோதனைகளில் தேர்ச்சி பெறும் வரை அல்லது கீழே பந்தி (iii) (உ) இல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட காலம் வரை நடைமுறையில் இருக்கும்.

(உ) தகுதிகாண் காலமுடிவில் சிங்களத் தேர்ச்சியில் குறிப்பிட்ட தரத்தைப் பெறுவிடின் 120 ஆம், 121 ஆம் நிருவாகப் பிரமாணங்கள் பொருத்தமுடையனவாகும். மேலே (இ), (ஈ), (உ) இல் உள்ள நிபந்தனைகள் சிங்கள மொழி மூலம் சேவையிற் சேர்க்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தா.

(ஊ) கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நிருவாக மாவட்டத்தின் எக்கிராம சேவகர் பிரிவுக்கும் இடமாற்றத்திற் குள்ளாவர்.

(எ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் யாவரும் அவர்களின் நியமனத்தின் பின் செய்ய வேண்டிய கடமைகளில் பயிற்சி பெறல் வேண்டும். தகுதியான கிராம சேவகர்களின் நியமனங்கள், பரீட்சார்த்தி திருப்திகரமாகத் தனது பயிற்சியை பூர்த்தி செய்துள்ளார் என்றும், தற்காலிக கிராம சேவகர்களாக நியமனஞ் செய்யப்படுவதற்கும் சகல முறைகளிலும் தகுதி யுடையவர் என்றும் குறிப்பிட்டு நிருவாக மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க அதிபரினல் வழங்கப்பட்ட சான்றி தழ்களின் பேரிலேயே செய்யப்படும்.

ஆரம்பத்தெரிவின் போது இப்பரீட்சார்த்தியின் பயிற்சிக்காலம் மூன்று மாதங்களுக்கு மேற்படாது என்பதுடன், எல்லாப் படிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 50 ரூபா விகிதத்தில் பயிற்சி பெறுவோருக்கும் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்தில் பரீட்சார்த்திகள் விடு முறைச் சலுகைக்கு உரித்துடையராகார்.

(ஏ) பயிற்சிக்குப்பின் கிராம சேவகர் ஒருவர் கிராம சேவகராக மூன்றுண்டுச் சேவையைப் பூர்த்தியாக்கும் வரை, அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது. மேலும் அவர் உறுதிப் படுத்தப்படவேண்டுமென அரசாங்க அதிபர் திருப்தி அடையும் வரையும் அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்படமாட்டாது.

9. **விண்ணப்பங்கள்.**—(i) இக்கச்சேரியிலிருந்து அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் அலுவலகம் எதிலிருந்தும் விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளலாம். மேற்போந்த 4 (iv) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தகுதிப்பரீட்சையை எம்மொழியில் சித்தியடைந்தார்களோ அம்மொழியில் அல்லது தமது விருப்பத்தின் பேரில் சிங்கள மொழியில் தம் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சார்த்திகள் நிரப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவத்தைப் பரீட்சார்த்திகள் எவ்வகையிலும் திருத்தஞ் செய்தற்குத் தடுக்கப்பட்டுள்ளனர். பொருத்தமான படிவத்தில் தயாராக் கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள், அரசாங்க அதிபர், கச்சேரி, மாத்தறை, என்னும் முகவரிக்கு 1971 ஆம் ஆண்டு ஜனவாரி மாதம் 18 ஆம் திகதியன்றே அதற்கு முன்னரோ சென்றடையத்தக்கதாகப் பதிவுத்தபாலில் அனுப்பு தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை நேரடியாக அரசாங்க அதிபருக்குக் குறிப்பிட்ட திகதியில் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பிரதியொன்று விண்ணப்பதாரரின் திணைக்களத்தலைவருக் கூடாகவும் அனுப்பப்படல் வேண்டும்.

(iii) குறிப்பிட்ட தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அரசாங்க அதிபருக்கு அல்லது கச்சேரியைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப் படலாகாது.

10. **தகைமைச்சாதனங்கள்.**—(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப்படலாகாது. கோரப்பட்டவாறன படிவத்தில் தேவையான விபரங்கள் தரப்படுதல் வேண்டும். இலங்கையில் நிறைவாக இல்லாத ஒரு விண்ணப்பம், அதன் சொந்தத்திறமைகளின் பேரில் பரிசீலனை செய்யப்படுவதோடு, நிராகரிக்கவும்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தகமையடைந்த பரீட்சார்த்திகளிடமிருந்து தகவுத் திறனை நிரூபிப்பதற்கு சாதனச்சான்று காட்டுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப் பட்டால், சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமானவையாகும் :—

(அ) நற்பண்புச் சான்றிதழ்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி ஒருவர் அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையில் இருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையில் இருந்து அண்மையில் விலகி இருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்சான்றிதழைப் பெறுதல் வேண்டும். அவ்வா றில்லாதவிடத்து அதைச் சமாதான நீதவான், வழக்கறிஞர் (அப்புக்காத்து) வழக்கறிஞர் (பிரக்கிராசியார்) அல்லது நொத் தாரிசு, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அல்லது ஆண்டுக் குத் திரட்டிய சம்பளமாக 4,800 ரூபா அல்லது அதற்கு மேற் பெறும் ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும், உடனடியாகத் தொடர்பு கொள்ளக்கூடியவருமான யாரேனுமொருவர் ஆகிய வர்களில் எவராவது ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். சான்றிதழில் வழங்குபவரின் பெயர் பதவிப்பெயர், முகவரி, ஆகியவை தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் நற் சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார். ஆனல் அவர்கள் தமது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமானவை என்றும் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டால், அவர் களைச் சேவை ஒப்புக்கொள்ளவிட முடியுமென்றும் கூறுமொரு சான்றிதழைத் தமது திணைக்களத் தலைவரிடமிருந்து சமர்ப்பிக்கு மாறு வேண்டப்படுவார்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் அதிபதி யினல் வழங்கப்பட்ட வயதுச்சான்றிதழ், உத்தேச வயதுச் சான்றிதழ், ஒன்றினைச் சமர்ப்பிக்கமட்டுமே முடிந்த எப்பரீட் சார்த்தியினதும் பிறந்த திகதி, அச்சான்றிதழில் குறிப்பிடப் பட்டுள்ள பிறந்த ஆண்டின் யூலை 1 ஆம் திகதியாகக் கருதப்படும்.

**குறிப்பு.** (i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேடப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப்பதிவி லிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள் ளப்படமாட்டா.

(ii) சத்தியக்கடுதாசிகளோ ஞானஸ்நானச் சான்றிதழ்களோ பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(iii) பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயர்/பெயர்கள் பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும் பரீட்சார்த்தி விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/ பெயர்களிலிருந்து வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, விடயத்திற்கேற்றவாறு (110 ஆம் அத்தியாயம்) பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை, 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 394 ஆம் இலக்கத்திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க தமது பெயர்களை மாற்றி யுள்ளவர்களுமான பரீட்சார்த்திகள் திருத்தப்பட்ட பிறப்புப் பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவுச் சான்றிதழ்கள் அல்லது வம்சா வழியினர் என்னும் கோரிக்கை யை ஏற்றுக்கொண்டதற்கான மூலக்கடிதம் (ஏற்புடைய விடத்து).

(ஈ) கல்வித்தகைமை பற்றிய மூலச் சான்றிதழ், அல்லது சான்றிதழ் வழங்கப்படாத விடத்து, பிற உத்தியோக பூர்வமான சாதனங்கள், எடுத்துக்காட்டாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட இலங்கை க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சைப் பெறு பேற்று நறுக்கு அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற மூலக்கடிதம்.

(உ) மேலே 4 (vi) இன் கீழ் உள்ள தகைமையினை நிரூபிக்கும் சான்றிதழ்கள்.

(IV) விண்ணப்பம் செய்யும்போதே தேவையான சாத னங்கள் யாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு மதியுரை கூறப்படுகின்றது. நேர்முகப்பரீட்சை யின்போது தேவையான சாதனங்களைச் சமர்ப்பிக்க முடியாதி ருக்கும் அல்லது அவற்றைச் சமர்ப்பிக்கத் தாமதிக்கும் பரீட்சார்த் தியினது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11. **பொய்யான விபரங்கள் கொடுக்கப்படுதற்குரிய தண்டனை.**—இவ்வறிவிப்பில் காட்டப்பட்டுள்ள பிரமாணங்களின் படி பரீட்சார்த்தி யொருவர் தகைமையற்றவராகக் காணப்பட்டால் தெரிவு செய்தற்கு முன்போ தெரிவு செய்த பின்போ எந்நிலையிலாவது அவரது விண்ணப் பம் நிராகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாகும்.

பரீட்சார்த்தியொருவரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் எவையேனும் அவரறிந்த வரையில் பொய்யெனக்காணப்பட்டால், அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால் அல்லது அவரின் சேவைக்காலத்தில் எப்பொழுதாவது அவர் விண்ணப் பத்திற்குத் தகைமையற்றவரென்று நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையில் இருந்து உடனே நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

இவ்வறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்குக் கண்டிப்பாக இணங்கி ஒழுகாதோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. **மருத்துவப் பரிசோதனை.**—நியமனத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கேற்ற உடற்றகுதி அவர்களுக்கு உண்டென்பதைக் காட்டுவதற்கு மருத்துவப் பரிசோதனையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர். மருத்து வப் பரிசோதனையில் தவறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படமாட்டார்.

13. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயமும் அரசாங்க அதிபரின் தற்றுணிபின் படி தீர்மானிக்கப்படும்.

திஸ்ஸ தேவேந்திரா,
வேலை பார்க்கும் அரசாங்க அதிபர்,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 8 ந உ.

12-637—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937.

### மன்னார் மாவட்டத்தில் பெரியபுள்ளச்சிபொற்கேணிப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவுகாரர் பதவி

பெரியபுள்ளச்சிப்பொற்கேணி பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவுந் திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாவட்ட பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மன்னார்,
1970 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 27 ந் திகதி.

12-708/1—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

### மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரிவிற்கு முசலி வடக்கும் தெற்கும் மறுச்சுக்கட்டி தவிர்த்து முஸ்லிம் விவாகப் பதிவுகாரர் பதவி

முசலி வடக்கும் தெற்கும் மறுச்சுக்கட்டி தவிர்த்து முசலிப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், விவாகமாகி மனையுடனிருப்பவர்கள் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிர தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம் சனசமூக நிலையங்களிலும், இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாவட்ட பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மன்னார்,
1970 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 27 ந் திகதி.

12-708/2—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

### மன்னார் மாவட்டத்தில் முசலி பிரிவின் மறிச்சுக்கட்டி கிராம சேவையாளர் பகுதிக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

மறிச்சுக்கட்டி முஸ்லிம் விவாகப் பிரிவில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் விவாகமாகி மனைவியுடனிருப்பவர்கள் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிர தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம் சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில், அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாவட்ட பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மன்னார்,
1970 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 27 ந் திகதி.

12-708/3—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

### மட்டக்களப்புப் பெரும் பகுதியில் கிரான் பிறப்பு, இறப்புப் பிரிவுக்கும், ஏறாவூர் கோறளைப் பற்று பிரிவுக்கும் விவாக (பொது) பதிவுகாரர் பதவி

கிரான் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிறதாரதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு சனவரி மாதம் முப்பதாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தா. பாலச்சந்திரன்.
பெரும்பகுதிப் பதிவுகாரர் (மேலதிக).

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் 3 திகதி.

12-570—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

## மட்டக்களப்புப் பெரும்பகுதியில் கொக்குவில் பிறப்பு, இறப்புப் பிரிவுக்கும், மண்முனைப்பற்று வட பிரிவுக்கு விவாக (பொது) பதிவுகாரர் பதவி

கொக்குவில் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு சனவரி மாதம் முப்பதாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தா. பாலசந்திரன்,
பெரும்பகுதிப் பதிவுகாரர் (மேலதிக).

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் 3 திகதி.

12-571—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## களுத்துறை பெரும்பகுதியில் மொறகல்ல பிறப்பு, இறப்புப் பிரிவிற்கும், களுத்துறை பாணந்துறை தோட்டமனை பிரிவிற்கும் விவாக (பொது) பதிவுகாரர் பதவி

மொறகல்ல பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள். அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு சனவரி மாதம் பதினைந்தாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மு. ப. திசநாயக,
பெரும்பகுதிப் பதிவுகாரருக்காக.

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
களுத்துறை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 6 ந உ.

12–610—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கிராம சேவையாளர் பதவியில் ஆட்கள் சேர்ப்பு

மேற்கூறிய விடயமாக 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதியிட்ட 14,932 ம் இலக்கமுள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் கீழ்க்கண்டவாறு திருத்தப்பட்டுள்ளது :—

(iv) பரீட்சார்த்திகள்—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண் கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர் தரம்) **அல்லது** பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(v) ம் பந்தியில் உள்ள 15.12.70 என்ற திகதி 15.1.71 திகதியெனத் திருத்தப்பட்டுள்ளது.

உப பந்தி (vi)—உப பந்தி முழுவதையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் :

(vi) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது,

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது,

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படவேண்டும்.

**குறிப்பு :** பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

**7. நேர்முகப் பரீட்சை.**—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் :

**7. நேர்முகப் பரீட்சை :**

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமைபேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாணை, விவகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப் புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப்படையின்கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின்கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

**உதாரணம் :** 10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின்கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக்குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 அல்லது அதற்கு குறைய | .. | 75 |
| 6—10 .. | .. | 120 |
| 11—15 .. | .. | 150 |
| 16—20 .. | .. | 160 |
| 21—25 .. | .. | 175 |
| 26—30 .. | .. | 180 |
| 31—35 .. | .. | 185 |

(iv) கீழே 10(iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின்கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

9(ii) ஆம் பந்தியிற் குறிப்பிட்ட திகதி 15.1.71 எனத்திருத்தப் பட்டுள்ளது.

வ. சு. விஜேவீர,
வதுளை மாவட்ட அரசாங்க அதிபர்.

வதுளை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம்,
வதுளை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 8 ந் வ.

12–608—18.12.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

கேகாலை மாவட்டத்தில் கிராம சேவையாளர்கள் திரட்டுதல் சம்பந்தமாக பந்தி 7 ல் " நேர்முகப்பரீட்சை " யும் உப-பந்தி (10) ம் (vi) ம் பந்தி 4 ல் " தகைமைகள் " பற்றி ஆண் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள 12.11.70 ல் வெளிவந்த அரசாங்க வர்த்தமானி இல. 14,932 பக்கத்தில் கீழ்க்காணும் விதத்தில் திருத்தப்பட்டிருக்கிறது.

4. **தகைமைகள்.**—உப-பந்தி 4 ஐ துப்பரவாக நீக்கிவிட்டு பின்வருவனவற்றை சேர்க்க :—

(iv) பரீட்சார்த்திகள்—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன் குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது **ஆறு பாடங்களில்** சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரணம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தகக் கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர் தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

உப-பந்தி—(vi) உப-பந்தி முழுவதையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் :—

(vi) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்விகற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற பாடசாலை சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு.**—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையிலுள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. **நேர்முகப் பரீட்சை.**—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் :—

7. **நேர்முகப் பரீட்சை—**

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில், தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை மதிப்பாண்மை, விவேகம் முதலியனவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும். கிராமம் தொடர்பான விடயங்கள் அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித் திட்ட அடிப்படையின் கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு, பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றி பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

உதாரணம்.—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெற்றிடங்களின் பெருக்கங்களுக் குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய | .. | 75 |
| 6—10 .. | .. | 120 |
| 11—15 .. | .. | 150 |
| 16—20 .. | .. | 160 |
| 21—25 .. | .. | 175 |
| 26—30 .. | .. | 180 |
| 31—35 .. | .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாவிடின் அது அவர் தகுதிபெற்றிராமையே காரணமாக இருக்கும்.

விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி 1970 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ம் திகதி மட்டும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

கே. எச். ஜே. விஜயதாச,
அரசாங்க அதிபர்,
கேகாலே.

கேகாலேக் கச்சேரி,

12–612—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

### அம்பாறை மாவட்டம்

இலக்கம் 14,932 யும், 1970.11.12 ம் திகதியுமுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் சார்பாக,

2. மேற்குறிப்பிட்ட அறிவித்தலை கீழ்குறிப்பிட்ட பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதென பொதுமக்கள் அறிவதற்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(i) கீழ் குறிப்பிட்ட பிரகாரம் மூல அறிவித்தலின் 3ம் பந்தி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

#### கல்வித்தராதாம்

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அல்லது,

(இ) உயர்ந்த தகைமைகள், அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** சிங்களம் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) கீழ் குறிப்பிட்ட பிரகாரம் ஆரம்ப அறிவித்தலில் 5 ம் பந்தி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரிவு காரியாதிகாரி காரியாலயங்களிலும் அம்பாறைக் கச்சேரியிலும் விண்ணப்பப்பத்திரங்கள் 1971.1.5 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். ஆரம்ப அறிவித்தலிலும் மேற்குறிப்பிட்ட பிரகாரம் தகைமையுடைய விண்ணப்பக்காரர்களால், சேவை நிபந்தனைகள், வெற்றிட எண்ணிக்கை, தெரிவு செய்யும் முறை ஆகியவைகளைப் பற்றிய முழு விபரங்களையும அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரிவுக்காரியாதிகாரி காரியாலயங்களிலும், அம்பாறைக் கச்சேரியிலும் பெற்றுக்கொள்ளலாம். சரியாக சம்பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் 1971.1.15 ம் திகதிக்கு முன்பு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட வேண்டும்.

ஆர். பீ. வீரக்கோன்,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

கச்சேரி,
அம்பாறை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 8 ந உ.

12–611—18.12.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## காலி மாவட்டத்திலே பலப்பிட்டிய வட்டாரத்திற்கு பிறப்பு, இறப்பு, வெல்லபொட பத்துவ வட்டாரத்திற்கு விவாக (சாதாரணம்) பதிவுகாரர் பதவி

பலப்பிட்டிய பிறப்பு, இறப்பு பதிவுகாரர் வட்டாரத்தினுள் நிரந்தரமாக வசிப்பவர் அல்லது அங்கு சில காலம் வசித்து வந்தமையை ஆதாரமாகக் கொண்ட கிராம மக்களின் நன்மதிப்பைப் பெற்ற விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் முடிவு நாளன்று வயது 21 க்குக் குறையாத ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமிருந்தும் மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகட்கு இவ்வயதெல்லை உடந்தையாகாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய கல்வி மற்றும் தகுதிகள் சம்பந்தமான விபரங்களை இக்காரியாலயத்திலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் காரியாலயத்திலும் கிராம, சேவகர் காரியாலயத்திலும், உள்ளூராட்சிமன்றக் காரியாலயங்களிலும், கிராமக் கோடு, தபால் கந்தோர், பொலிஸ் நிலையம், சனசமூக நிலையம், பிரதான பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கங்கள் வட்டாரத்திலுள்ள பிரதான இடங்கள், காரியாலயங்கள் ஆதியாம் இடங்களிலுள்ள விளம்பரப் பலகையில் இடம் பெறும்.

3. இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலே விண்ணப்பிக்க வேண்டியதுடன், அவை 1971 சனவரி மாதம் 31 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

வி. சி. பீ. உனந்தன்ன
மாவட்டப் பதிவுகாரர்.

மாவட்டப் பதிவுகாரர் காரியாலயம்,
காலி,
1970 ம் ஆண்டு திசம்பர் மீ 8 ந உ.

12–609—18.12.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,937

## கிராம சேவகர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

அனுராதபுர மாவட்டம்

1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ந் தேதிய இல. 14,934 ஐக் கொண்ட இலங்கை அரசாங்க செய்தி மடலில் வெளியிடப்பட்ட விளம் பரப்படி, மேற்படி விளம்பரத்தின் பந்திகள் 4, 7 ஐ முழுவதையும் நீக்கி பின்வருவனவற்றைப் பதிலீடு செய்யவும் :-

விண்ணப்பங்கள் சென்றடையும் திகதி 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதி வரை நீடிக்கப்படுகிறது.

ஏ. பீ. பி. மன்னம்பேரி,
அரசாங்க அதிபர்,
அனுராதபுரம்.

அனுராதபுரக் கச்சேரி,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 9 ந் வ.

(iv) பரீட்சார்த்திகள் :—

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரணதரம்) பரீட்சை யில் சிங்களம் அலலது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தி யெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர் தரம்) அல்லது பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

உப-பந்தி (vi)—உப-பந்தி முழுவதையும் நீக்கிப் பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல்.

(vi) பரீட்சார்த்திகள் :—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத் தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப் பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்ற வற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம் ; அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ;

அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந் தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண் டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான் றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படவேண்டும்.

குறிப்பு.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப் படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளை கள் விடயத்தில், பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை.—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவன வற்றைப் பதிலீடு செய்தல்.

7. நேர்முகப் பரீட்சை.—

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப் படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமை யேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்த மாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப்புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப் படையின்கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத் தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண் ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமை களில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடை கிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.—

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின்கீழ் போதியளவு புள்ளி களைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

உதாரணம்.—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின்கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்த வரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங் கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப் பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக் குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய | | .. | 75 |
| 6—10 | .. | .. | 120 |
| 11—15 | .. | .. | 150 |
| 16—20 | .. | .. | 160 |
| 21—25 | .. | .. | 175 |
| 26—30 | .. | .. | 180 |
| 31—35 | .. | .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின்கீழ் தகுதிபெற்றிராத பரீட்சாத்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்

12-638—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலி ஸ்தானங்கள்

சபையின் சேவையில் V ஆம் தர கணக்கு, கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தர்கள் பதவிகட்கு கவனிக்கப்படுவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—(எல்லாம் உட்பட) மாதாந்தம். ரூபா 600/- —40 × 10— ரூபா 1,000/-. ரூபா 800/-, ரூபா 920/- பெறும்போது வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

3. **தகைமைகள்.**—(அ) **வயது**—1.1.1971 ஆம் தேதியன்று 22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.

(ஆ) **உயர்தொழில்—**

(i) தத்துவம் பெற்ற கணக்காளர் நிலையத்தின் இடைப் பரீட்சையில் (இன்டர்மீடியற் பரீட்சை) சித்தியெய்தியிருக்க வேண்டும்.

அல்லது

(ii) செலவு, வேலை கணக்காளர் பரீட்சையில் (கோஸ்ட் அன்ட் வேர்க்ஸ் அக்கவுன்டன்ஸ்) பரீட்சையில் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகளில் சித்தியெய்தியிருக்கவேண்டும்.

அல்லது

(iii) இலங்கை தொழினுட்பக் கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுப் பரீட்சையில் சித்தியெய்தியிருக்கவேண்டும்.

அல்லது

(iv) இவற்றையொத்த தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்தோடு

பொருந்திப் பயிலும் ("ஆட்டிக்கிள்ஸ்") காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருக்கவேண்டும் அல்லது அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமொன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை வேலையில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு அனுபவமிருத்தல் வேண்டும்.

4. (அ) அரசாங்க சேவையில அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களங்கள் மூலமாக அனுப்பிவைக்கவேண்டும். அவர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்தவேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப்பகுதியிலேனும், சபையின் எப்பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. மேலே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

பதில் ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 5.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்)
5. 1.1.1971 ந் திகதியன்று சரியான வயது : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? ————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்)
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக)
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்)
10. தொழினுட்பத் தகைமைகள் : ————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்)
11. தொழில் : ————.
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலை கொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகிய திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக)
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம் : ————.
(வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக)
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக)
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? : ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? : ————.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் :—
(1) ————.
(2) ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12-658—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

## திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியார் வட பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

கொட்டியார் வட பிரிவு பிறப்பு, இறப்பு பகுதியில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும், பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. 8.5.1970 இல் 14,905 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 24.4.1970 ஆம் திகதிய விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

டப்ளியு. எல். பெர்னாண்டோ,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 9 ந் வ.

12-707—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கிராம சேவையாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

### யாழ்ப்பாண மாவட்டம்

1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் திகதிய 14,933 இலக்கங் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு உங்கள் அவதானத்தைக் கோரப்படுகின்றது. மேற்கூறப்பட்ட பிரசுரம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

4. **தகைமை**.—(4) உப பந்தியை முற்றாக நீக்கி பின்வருவனவற்றைச் சேர்க்கவும் :—

(4) பரீட்சார்த்திகள் :

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது **இரண்டு** பாடத்திலாயினும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், அல்லது ;

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதரம்)ப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது **இரண்டிலாயினும்** திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் ; அல்லது ;

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர்தரம்) **அல்லது** பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.—சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியிலும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமிழ் மொழியிலுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

உப பந்தி (VI) உப பந்தி முழுவதையும் நீக்கிப் பின்வருவனவற்றைச் சேர்க்கவும் :—

(6) பரீட்சார்த்திகள்—

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவையாளரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப்பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம், அல்லது ;

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்தவராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும் ; அல்லது ;

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு**.—பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய்யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில் பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. **நேர்முகப் பரீட்சை**.—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவனவற்றை பதலீடுசெய்தல் :—

7. **நேர்முகப் பரீட்சை** :—

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றும், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவேகம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப் புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினாக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப்படையின் கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளிகளைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

**உதாரணம்** : 10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின் கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்தவரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக்குக் குறைவாக இருக்க மாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | | நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய | | .. | 75 |
| 6—10 | .. | .. | 120 |
| 11—15 | .. | .. | 150 |
| 16—20 | .. | .. | 160 |
| 21—25 | .. | .. | 175 |
| 26—30 | .. | .. | 180 |
| 31—35 | .. | .. | 185 |

(iv) முந்திய விளம்பரத்தின் 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின் கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றிராமையே காரணமாக இருக்கும்.

9. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பிக்கும் கடைசித் திகதி 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முந்திய விளம்பரத்தின்படி ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

எம். ரீ. டபிள்யூ. அமரசேகர,
அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1970 ம் ஆண்டு திசெம்பர் மீ 8 ந் வ.

12–651—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## கிராம சேவையாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

1970.11.12 ம் திகதியில் வெளியான 14,932 என்ற இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு (II) ல் பிரசுரிக்கப்பட்ட " கிராம சேவையாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு " என்ற அறிவித்தலின் 4 (iv), 4 (v), 4 (vi), 7 ம் பந்திகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதி 31.12.70 என நீடிக்கப்பட்டுள்ளது என்று மேலும் அறிவிக்கப்படுகின்றது.

### திருத்தம்

(iv) பரீட்சார்த்திகள்

(அ) இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியினும், எண்கணிதம் அல்லது கணிதத்திலும் சித்தி அடைந்திருப்பதுடன், குறைந்தது இரண்டு பாடத்திலாயினும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(ஆ) இரண்டு இருக்கைக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்ற கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியும், எண்கணிதம் **அல்லது** வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டிலாயினும் திறமைச் சித்தி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது

(இ) உயர்ந்த தகைமைகள் அதாவது நான்கு பாடங்களில் சித்தி யெய்திய கல்விப் பொதுத் தராதரப் பத்திரதாரராக (உயர் தரம்) **அல்லது** பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**— சிங்களம் பேசும் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் சிங்கள மொழியினும், தமிழ் பேசும் கிராமசேவையாளர் பிரிவு களில் உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட் சார்த்திகள் தமிழ் மொழியினுமாகத் தமது சி. பா. த. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(v) பரீட்சார்த்திகள் 1970.12.31 ஆந் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவோ 35 வதிற்கு கூடியவர்களாகவோ இருத்த லாகாது. அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களை உடையவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

உப பந்தி (vi)—உப பந்தி முழுவதையும் நிக்கிப் பின்வருவன வற்றைப் பதிலீடு செய்தல்.

(vi) பரீட்சார்த்திகள்

(அ) விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலத்தில் தாம் நியமனம் கோரும் நிருவாக மாவட்டத் தில் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் தொடர்ந்து நிரந் தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இது கிராம சேவகரிடம் இருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வீட்டு வசிப் பாளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பட்டியல் போன்றவற்றையும் இதற்கு ஆதாரமாக அளிக்கலாம், அல்லது

(ஆ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் அவர் பிறந்த வராக இருத்தல் வேண்டும். இது அவரின் பிறப்புச் சான்றிதழ் களின் மூலம் சான்றுபடுத்தல் வேண்டும்,—அல்லது

(இ) வெற்றிடம் ஏற்படும் நிருவாக மாவட்டத்தில் தொடர்ந்து குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு கல்வி கற்றவராக இருத்தல வேண்டும். பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்ற பாடசாலைச் சான்றிதழ்கள் இதற்கு ஆதாரமாக அளிக்கப்படவேண்டும்.

**குறிப்பு.**— பெற்றோர்கள் காலத்திற்குக் காலம் இடமாற்றம் செய் யப்படுவதால் மேற்கூறிய வதிவிடத் தகைமைகளையிட்டுத் திருப்திப்படுத்த முடியாத மாற்றத்திற்குரிய சேவையில் உள்ள அலுவலர்களின் பிள்ளைகள் விடயத்தில், பரீட் சார்த்தியின் நிரந்தர வதிவிடமாகப் பெற்றோர் ஒருவரின் பிறப்பிடம் கருதப்படும்.

7. நேர்முகப் பரீட்சை—முழுப் பந்தியையும் நீக்கிப் பின்வருவனவற் றைப் பதிலீடு செய்தல் :—

7. **நேர்முகப் பரீட்சை**—

(i) 100 புள்ளிகளைக் கொண்ட நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப் படும். பரீட்சையில் தோற்றம், பண்பியல்புகள், தலைமையேற்று நடத்துவதற்கான தகுதிகள், நடத்தை, மதிப்பாண்மை, விவே கம் முதலியவற்றையும் உள்நாட்டு நடப்புகள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தியின் பொதுவான அறிவையும் கொண்டு இப் புள்ளிகள் வழங்கப்படும்.

கிராமம் தொடர்பான விடயங்கள், அதன் நலன் என்பன சம்பந்தமாக பரீட்சார்த்தியின் அறிவை நிர்ணயிக்குமுகமாக வினுக்கள் கேட்கப்படும்.

(ii) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தரவாரித்திட்ட அடிப்படையின் கீழ் திறமை வரிசைக் கிரமத்தில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண் ணிக்கை கீழே பந்திகள் (அ), (ஆ) கீழ் குறிக்கப்பட்ட தகைமைகளில் எதன் பிரகாரம் கூடிய பரீட்சார்த்திகள் தகைமை அடைகிறார்கள் என்பதிலிருந்து கணிக்கப்படும்.

(அ) நேர்முகப் பரீட்சைக்கான ஆகக்கூடிய புள்ளிகளுடன் (100) நியமனத்திற்கான வாய்ப்பு பரீட்சார்த்திக்கு இருக்கும் வகையில் தரவாரித் திட்டத்தின் கீழ் போதியளவு புள்ளி களைப் பெற்றிருந்தாலன்றிப் பரீட்சார்த்தி எவரும் நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்.

**உதாரணம்**—10 வெற்றிடங்கள் இருந்தால் தரவாரித் திட்டத்தின்கீழ் திறமை வரிசையில் பத்தாவதாக வந்த வரால் பெறப்பட்ட புள்ளிகள் மொத்தம் 340 ஆயின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 240 புள்ளிகளையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் உள்ள வெற்றிடங் கள் தொடர்பாக நேர்முகப் பரிட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை கீழே குறிப் பிடப்பட்டுள்ளவாறு, வெற்றிடங்களின் பெருக்கங்களுக் குக் குறைவாக இருக்கமாட்டாது.

| வெற்றிடங்களின் எண்ணிக்கை | | நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டியோ ரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 அல்லது அதற்குக் குறைய | | 75 |
| 6—10 | .. | 120 |
| 11—15 | .. | 150 |
| 16—20 | .. | 160 |
| 21—25 | .. | 175 |
| 26—30 | .. | 180 |
| 31—35 | .. | 185 |

(iv) கீழே 10 (iii) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் களின் மூலப்பிரதிகளைப் பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டும்.

(v) மேற்போந்த நிபந்தனையின்கீழ் தகுதிபெற்றிராத பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதுவிடின் அது அவர் தகுதி பெற்றி ராமையே காரணமாக இருக்கும்.

பீ. ஜே. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர்,
புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 10 ந் வ.

12–711—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

### மட்டக்களப்புப் பெரும்பகுதியில் கோவில்போரதீவு பிரிவிற்கு பிறப்பு, இறப்புக்கும், மண்முனை தென் எருவில் போரதீவுப் பிரிவிற்கு விவாக (பொது) பதிவுகாரர் பதவி

கோவில்போரதீவு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு சனவரி மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தா. பாலசந்திரன்,
பெரும்பகுதிப் பதிவுகாரர் (மேலதிக).

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு திசம்பர் மாதம் 7 திகதி.

12-654—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

### திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

மூதூர்ப் பிரிவு பிறப்பு, இறப்புப் பகுதியில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. 8.5.70 இல் 14,905 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 24.4.1970 ஆம் திகதிய விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

டப்ளியு. எல். பெர்ணன்டோ,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 9 ந் வ.

12-706—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கைப் பரீட்சைப் பகுதி

**ஆங்கில ஆசிரியர் பரீட்சை**

**மார்ச் 1971**

மேற்படி பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சை நிலையங்களில் 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும்.

**பரீட்சை நிலையங்கள்**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், வதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புள்ளை, திக்வலை, எகலியகொடை, கல்கமுவ, காலி, ஹோமகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனறாகலை, நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நுவரேலியா, பருத்தித்துறை, பொல்லநறுவை, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8" × 13" அளவினதாய கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப் படிவம் (தட்டெழுத்து மூலம் தயாரிக்கப்படின் நன்று) 1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரீட்சாதிகாரியின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத, பரீட்சார்த்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைப் பரீட்சாதிகாரிக்கு அனுப்புவதற்கு முன்னதாக 1965 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்காய பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

4. திருத்தியமைத்த பாடத் திட்டத்தின் "ஏ" பிரிவில் மூன்று வினாத்தாள்களிற் சித்தியடைதல் வேண்டும். அவையாவன :

(i) ஆங்கிலபாஷை I

(ii) ஆங்கிலப்பாஷை II

(iii) ஆங்கில இலக்கியம் அல்லது விஞ்ஞான ஆங்கிலம் அல்லது வர்த்தக ஆங்கிலம்.

நியமிக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளவியலாத பரீட்சார்த்திகள், அப்புத்தகங்களிலிருந்து எடுக்கப்படாத மூன்றாவது வினாப்பத்திரத்துக்கு விடையிறுக்கக் கூடியதாகச் செய்யும் பொருட்டு, நியமிக்கப்பட்ட பாடப் புத்தகங்களிலிருந்து கொடுக்கப்படும் வினாக்களுடன் சேர்த்து விருப்பப்படி தெரிவு செய்வதற்கு வேறு வினாக்களும் கொடுக்கப்படும்.

5. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற் பெறவிரும்புவோர் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்து 50 சதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம் ; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் 1 ரூபா 10 சதத்திற்குரிய காசுக்கட்டளையையேனும் அல்லது அஞ்சற் கட்டளையையேனும் பரீட்சாதிகாரிக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

**1971 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெறும் ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்**

பரீட்சையின் எப்பகுதிக்குத் தோற்றுகிறீர் : சுட்டிலக்கம் : (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்.)

.........................

(இங்கே "ஏ" அல்லது "பீ" எனப் பெரிய எழுத்தில் எழுதுக).

1. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் :————.
ஆணு/பெண்ணு : ————.

2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.
(வண./திரு./திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியராயின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை எழுதுதல் வேண்டும். அன்றேல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்.)

3. நிரந்தர முகவரி :————.
உத்தியோக முகவரி : ————.

4. பரீட்சை நிலையம் (விருப்பத்திற்குரிய வரிசைக் கிரமப்படி எழுதுக.) :
1. :————.
2. ————.
3. :————.
(மூன்று நிலையங்களும் வேறு வேறாய் இருத்தல் வேண்டும்)

5. பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாகத் தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. (ஆங்கில ஆசிரியர் பரீட்சை "ஏ" பிரிவிற்கு ரூபா 25, "பி" பிரிவிற்கு ரூபா 20)

| |
|---|
| முத்திரை ஒட்டும் இடம். இம் முத்திரையில பரீட்சார்த்தியின்கையொப்பமும் திகதியும் இடப்பட்டுப் பயனற்றதாக்கப் படவேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. இலங்கை பிரஜா உரிமை : ————.
வம்சாவழியிலா அல்லது பதிவு செய்ததனுலா, பதிவு செய்து கொண்டதாயின் அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

7. (i) பிறந்த திகதி : ————.
(ii) 1971 ஜனவரி 1 ஆம் தேதியன்று வயது :
வருடம் : ———— ; மாதம் : ———— ; நாள் : ————.

8. (i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய—
வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம்:————.
வருடம்:————; மாதம்:————; சுட்டிலக்கம்:————.
(ii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையிற் சித்தியெய்திய—
(1) வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம்:————.
(2) வருடம்:————; மாதம்: ———— ; சுட்டிலக்கம்: ————.
(iii) ஆங்கிலப்பாஷை "அ" பாடத்திட்டத்தில் சித்தியெய்திய—
வருடம் :————; மாதம் : ————; சுட்டிலக்கம்:————.
வருடம் :————; மாதம் :————; சுட்டிலக்கம்:————.
(iv) ஆங்கிலப்பாஷை "ஆ" பாடத்திட்டத்திற் திறமைச் சித்தியாயின்—
வருடம்:————; மாதம் ;————; சுட்டிலக்கம் : ————.

9. ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் "பீ" பிரிவிற்குத் தோற்றுவதாயின் "ஏ" பிரிவிற் சித்தியெய்திய—
வருடம் :————; மாதம்:————; சுட்டிலக்கம் :————.

10. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது மகா கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக :————.

11. தாம் சித்தியடைந்த வேறு பரீட்சைகளின் அல்லது சேவையின் அடிப்படையில் சலுகை கோரின் அது பற்றிய விபரம்:————.
சலுகை கோரும் பகுதி:————.

12. சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம்:
இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புக்களையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி, இவ்விண்ணப்பத்தின் 7 ம் 8 ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் :————.

பாடசாலை முகாமை :————.

(அரசாங்க/கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட/உதவி நன்கொடை பெருத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக.)

கையொப்பம் : ————.

பெயர் : ————.

முகவரி : ————.

திகதி : ————.

13. **பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று.**—இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னால் ஒட்டப்பட்டதெனவும், இது இதன் முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாக பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டிய விதிகளுக்கும் ஒரே முகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகின்றேன்.

.....................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

14. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் : (எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும்)

................................................... ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி.................................... என்னுமிடத்தில் வதிபவர் எனவும் எனக்கு அவரை நன்கு தெரியும் எனவும், 1971 ஆம் ஆண்டு .................... மாதம் ......ந திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்.

பெயர்:————. தகுதி : ————.

முகவரி :————. திகதி : ————.

**கவனிக்க வேண்டியவை:**

விண்ணப்பப் படிவத்தின் 14 ம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(i) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டு, அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ii) ஆசிரிய சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரத்தை சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800 ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்தச் சம்பளமாக பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க, கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர், அப்பகுதியின் கிராமசேவகர், புத்தவிகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறின தகுதிவாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவர்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 7 ந உ.

12-527—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

## பரீட்சைப் பகுதி—இலங்கை

**மருதானை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம், இரத்மலானை, காலி, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல், அனுராதபுரம், கேகாலை, வதுளை கனிட்ட தொழில் நுட்ப நிலையங்களில் 1971 ம் ஆண்டு அனுமதிப்பதற்கான பரீட்சைப் பிரமாணங்கள்**

மகா வித்தியாதிபதியின் இசைவுடனேயே இப்பிரமாணங்கள் வகுக்கப்பட்டு மகா வித்தியாதிபதியின் சார்பில் இப்பரீட்சை பரீட்சாதிகாரியால் நடாத்தப்படுகிறது.

(அ) நடைபெறும் பயிற்சி நெறிகளின் பூரண அட்டவணை, பயிற்சி நெறிகளில் இடம்பெறும் பாடவிதானங்கள் ஆகியவை பற்றிய விபரங்களை மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் அனுமதிப்பது தொடர்பில் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கைநூல்களில் பார்க்கவும் ; ஏனைய நிலையங்களைப் பொறுத்தவரையில் உரிய அதிபர்களுடன் தொடர்பு கொள்ளவும். யாதேனும் ஒரு பயிற்சி நெறிக்குப் போதிய தொகை அபேட்சகர்கள் விண்ணப்பிக்காத விடத்து அப்பயிற்சி நெறி இரத்துச் செய்யப்படக்கூடும்.

(ஆ) அனுமதிக்கான தகவுத்திறன் நிபந்தனைகள் பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில் வேறுபடும்.

(இ) தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்குமான தகவுத்திறன், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து பரீட்சார்த்திகள் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு அனுமதி கோரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு அனுமதிக்கப்படுதற்கு தகைமை பெறுமிடத்து, குறித்த ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரி ஒருவரை வேண்டும் உரிமையைத் தனதாகக் கொண்டுள்ள மகா வித்தியாதிபதியின் அங்கீகாரத்துக்கமைய, பரீட்சார்த்தி தனது தெரிவைச் செய்யலாம்.

(ஈ) மாலை நேரப் பயிற்சி நெறி ஒன்றுக்கு அனுமதிக்கப்படுதற்குக் குறித்த துறையில் வேலைக்கு அமர்ந்துள்ளவர்கள் மாத்திரமே சேர்த்துக்கப்படுவார்கள்.

(உ) யாதேனும் நிலையத்தின் ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வேறு ஒரு நிலையத்தின் மாலை நேர எந்திரவியல் பயிற்சி நெறிக்கு அனுமதி கோரின் உரிய பயிற்சி நெறிக்குப் பொருத்தமான புகுமுகப் பரீட்சையில் அவர் சித்தியடைய வேண்டும்.

2. **பரீட்சை நிலையங்கள்.**—(i) பரீட்சை பின்வரும் நிலையங்களில் நடாத்தப்படும் :—

கொழும்பு, மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாகல், வதுளை, அனுராதபுரம்.

(ii) பரீட்சார்த்தி ஒரு பரீட்சை நிலையத்தை மாத்திரமே தெரிவு செய்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்தில் மாற்றமெதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

3. **புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுதற்கான தகவுத்திறன்.**—அபேட்சகர் ஒருவர்—

(i) நற்குணமுடையவராகவும்,

(ii) இலங்கைப் பிரசையாகவும்,

(iii) குறித்த பயிற்சி நெறிக்கு அனுமதிப்பதற்கு வேண்டிய கல்வித் தகைமைகளைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும் (1970 ம் ஆண்டு டிசெம்பர் மாத க. பொ. த. (சாதாரணதர)ப் பரீட்சைக்குத் தோற்றி, பெறுபேறுகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்). ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் வேண்டிய கல்வித் தகைமைகள் இப்பிரமாணங்களில் முடிவில் காணப்படும் அட்டவணையில் கொடுபட்டுள்ளன.

**குறிப்பு.**—(i) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறும் பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில், அனுமதிக்கான தகவுத் திறன் நிபந்தனைகள் பயிற்சி நெறிப் போதனை மொழிக்கமைய வேறுபடக்கூடும்.

(ii) சி. பா. த. (ஆங்கில) ப. பெற்றிருக்கும் அல்லது க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் " அ " அல்லது " ஆ " பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருக்கும் பரீட்சார்த்தி ஒருவர் ஆங்கில மொழியில் சித்தி எய்தியதாகக் கருதப்படுவர்.

(iii) கணிதம் தேவைப்படுமிடத்து, க. பொ. த. (சாதாரண தர)ப. பரீட்சையில் ஆரம்ப கணிதத்தில் அல்லது தூய கணிதத்தில் அல்லது உயர்தர கணிதத்தில் சித்தி பெற்றிருப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) குறித்த ஒரு பாடத்தில் க. பொ. த. (உயர்தர)ப. பரீட்சையில் அபேட்சகர் ஒருவர் சித்தி அடைந்திருப்பின் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் அப்பாடத்திலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்படும்.

4. **வயதுக் கட்டுப்பாடு.**—ஒவ்வொரு பரீட்சை நெறிக்குமுரிய புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகவுத்திறனில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. **எழுத்து மூலப் பரீட்சைத் திகதி.**—இப்பரீட்சை 1971 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ந் திகதியன்று ஆரம்பமாகும்.

6. **நேர்முகப் பரீட்சை.**—எழுத்து மூலப் பரீட்சையில் போதிய தரத்தை அடைந்துள்ள ஒவ்வொருவரும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குச் சமூகமளிக்கும்படி வேண்டப்படக்கூடும் ; குறித்த பரீட்சைக்கான திகதி, நேரம், இடம் ஆகிய விபரங்கள் உரிய நிலைய அதிபரால் அறிவிக்கப்படும்.

7. **மொழி மூலம்.**—எழுத்து மூலப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கும். எனினும் பொது எந்திரவியல் அறிவிலும் எண்கணிதம் " இ " யிலும் வினாத்தாள்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் மாத்திரமே கிடைக்கும்.

8. **பரீட்சார்த்தி சேர விரும்பும் தொழில் நுட்ப நிலையம்.**—பரீட்சார்த்திகள் யாதேனும் இரு தொழில் நுட்ப நிலையங்களுக்கான அனுமதிக்குப் போட்டியிடலாம். புகுமுகப் பரீட்சைக்கான படிவத்தில் காணப்படும் உரிய கூட்டில் பரீட்சார்த்திகள், தமது விருப்ப ஒழுங்கின் பிரகாரம், இரு தொழில் நுட்ப நிலையங்களைக் குறிப்பிட வேண்டும்.

9. **நேர அட்டவணை :**

**முதல் நாள்**

மு. ப. 9.00—மு. ப. 11.00—கேத்திர கணித முறை வரைதலும் பொறிமுறை வரைதலும்
மு. ப. 11.15—மு. ப. 11.45—பொது விவேகம்
பி. ப. 1.00—பி. ப. 3.00—தூய கணிதம்
பி. ப. 3.15—பி. ப. 4.15—கட்டுரை (சிங்களம்/தமிழ்).

**இரண்டாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 9.30—கட்டுரை (ஆங்கிலம்)
மு. ப. 9.45—மு. ப. 11.45—எண்கணிதம் " அ "
பி. ப. 12.30—பி. ப. 2.30—பௌதிகவியல்
பி. ப. 2.45—பி. ப. 4.45—எண்கணிதம் " ஆ ".

**மூன்றாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 10.30—ஆரம்ப கணிதம்
மு. ப. 10.45—பி. ப. 12.45—பிரயோக கணிதம்
பி. ப. 1.45—பி. ப. 3.45—எண்கணிதம் " இ "
பி. ப. 4.00—பி. ப. 4.45—பொது எந்திரவியல் அறிவு.

10. **புகுமுகப் பரீட்சைக்கான பாடத்திட்டங்கள்.**—(அ) தூய கணிதம்—அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகியவற்றில் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சைக்கு உள்ளவாறு எண்கணிதத்தில் வினாக்கள் கொடுபடமாட்டா.

(ஆ) ஆரம்ப கணிதம்-அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகியவற்றில் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சைக்குள்ள வாறு. எனினும், வினாக்கள் ஆரம்ப முறையானவையாகவே அமையும். சிக்கலான கணக்குகளின் பிரயோகத்துக்கும் அவற்றின் கோட்பாட்டு முறைக்குமன்றி யாந்திரிக வேலைக்கும் நிதானித்து அறியக்கூடிய வேலைக்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படும். எண்கணிதத்தில் வினாக்கள் ஒன்றும் கொடுபடமாட்டா.

(இ) எண்கணிதம் " அ "—பௌதிகம், பிரயோக கணிதம், கேத்திர கணிதமுறை வரைதலும் பொறிமுறை வரைதலும்—க. பொ. த (சாதாரண தர)ப. பரீட்சைக்கு உள்ளவாறு.

(ஈ) எண்கணிதம் " ஆ "—க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சைக்கு வர்த்தக எண் கணிதத்தில் உள்ளவாறு.

(உ) எண்கணிதம் " இ "—நான்கு விதிகள், ஆங்கில முறை, மீற்றர் முறை அளவுகள், நீள் சதுரம், சதுரம், நேர்கோட்டு வடிவங்களும் வட்டங்களும் பெட்டிகளினதும் உருளைகளினதும் கோளங்களினதும் கன அளவுகள்.

(ஊ) கட்டுரை—கொடுபடும் பல விடயங்களுள் ஒன்றைப் பரீட்சார்த்திகள் தெரிவு செய்து அது பற்றிக் கட்டுரை எழுத வேண்டும். இவ்விடயங்கள் வியாபார முயற்சிகள், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞானம், உலக சம்பவங்களும் பிரச்சினைகளும், ஸ்தல சம்பவங்களும் பிரச்சினைகளும் ஆதியன போன்ற விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டனவாக அமையும். சரியான, தெளிவான சொற்களின் உபயோகத்துக்கும் எண்ணங்களை வாத முறையில் ஒழுங்குபடுத்துதற்கும் விசேட அம்சம் கொடுபடும்.

(எ) பொது எந்திரவியல் அறிவு—வேலைக்கள பொதுக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிக்கும் முறையான வினாக்கள் கொடுபடும்.

11. **கட்டணம்.**—பரீட்சைக்கான கட்டணம் பின்வருமாறு :—

(i) ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ரூபா 5.00 ; மேலதிக ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ரூபா 2.50.

(ii) கட்டணம், படிவத்தில் ஒட்டப்பட்டு பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு அழிக்கப்படும் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும். இங்ஙனம் அழிக்கப்படாது அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இப்பகுதி பொறுப்பேற்காது.

12. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(i) பிரமாணங்களுக்கு அமையவும் உரிய கட்டணத்துடனும் விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்கும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதல் தகவுத்திறன் ஏற்றுக்கொள்ளப்படுதலாக அமையாது, பரீட்சைக்குத் தகவுத்திறன் அற்றவராக அல்லது வேண்டிய தகவலைக் கொடுக்காதவராக அல்லது பொய்யான தகவலைக் கொடுத்தவராகக் காணப்படும் அபேட்சகர் ஒருவர் பரீட்சைக் காலத்திலேனும் பரீட்சைக்குப் பின்னரேனும் பயிற்சி நெறிக்காலத்திலேனும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பின்னரேனும் தகுதியற்றவராக்கப்படுவார்.

13. **விண்ணப்பம்.**—பரீட்சைப் பகுதியினால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். தனது முகவரி எழுதப்பட்டதும், " எஸ். ஜ. 94/71 " என இடது பக்க மூலையில் எழுதப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபாலுறையை அனுப்பி வைக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் ஜனவரி மாதம் 2 ம் திகதியிலிருந்து 10 ம் திகதி வரையும் விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களை நேரில் பெற விரும்புவோர் தொழில் நுட்ப நிலையங்களிலிருந்து ஜனவரி மாதம் 8 ம் திகதி முதல் 13 ம் திகதி வரைக்கும், பரீட்சைப் பகுதியிலிருந்து ஜனவரி மாதம் 8 ம் திகதி முதல் 15 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) பிரவேசப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். யாதேனும் ஒரு விபரம் பூரணமற்றதா யிருப்பின் அங்கு கொடுத்துள்ள விபரங்களுக்கமைய அப்படிவம் பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்படவேனும் பரீட்சையின் பின்னர் அவர் தகுதியற்ற வராக்கப்படவேனும் கூடும். பின்வரும் விடயங்களுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் கோரப்படுகிறது :—

(அ) வேலையில் அமர்ந்துள்ள பரீட்சார்த்திகள் தங்கள் பிரவேசப் பத்திரங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்கள் மூலமேனும் தமது ஸ்தல பகுதித் தலைவர்கள் மூலமேனும் அனுப்பவேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் கையொப்பம் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும். வேலையில் அமர்ந்துள்ளவர்களின் விண்ணப்பங்களில் கொடுபடும் கையொப்பங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களால் அல்லது ஸ்தல பகுதித்தலைவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரங்கள் பதிவு அஞ்சல் மூலம் **1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியதாக பரீட்சாதிகாரிக்கு (கொழும்பு 2) அனுப்பப்பட வேண்டும். மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iv) பிரவேசப் பத்திரங்கள் கிடைக்கப்படுவது பற்றி பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

(v) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்படலாகாது.

14. **பிரவேசக் கோரிக்கையை நிராகரித்தல்.**—(i) (அ) பூரணமற்ற அல்லது குறைபாடான அல்லது பிரமாணங்களுக்கு அமைய தயாரிக்கப் படாத (ஆ) உரிய கட்டணத்தை கொண்டிராத (இ) பிரவேசப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ; சம்பந்தப்பட்ட அபேட்சகர்கள் அதுபற்றி அறிவிக்கப்படுவார்கள். அபேட்சகர் ஒருவர் ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி இருப்பின் அவர் தகுதியற்றவராக்கப்படுவார்.

(ii) ஒரு பிரவேசப் பத்திரம் நிராகரிக்கப்படின் அல்லது அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவராக்கப்படின் அவர் தனது கட்டணத்தை இழப்பார்.

15. **பரீட்சையிலிருந்து விலகுதல் அல்லது பரீட்சைக்குச் சமுகமளியாதிருத்தலும் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தலும்.**—(i) பரீட்சையி லிருந்து விலகுவதான அறிவித்தல் பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படின், செலுத்தப் பட்ட கட்டணத்தின் 90% திருப்பிக் கொடுபடும்.

(ii) பரீட்சைக்குச் சமுகமளியாதிருத்தல் (எக்காரணத்தையிட்டும்) உட்பட சகல சந்தர்ப்பங்களிலும் **கட்டணமேனும் கட்டணத்தின் எப்பகுதி யேனும்** திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(iii) எனினும் ஒருவர் ஒரு வினாப்பத்திரத்துக்கேனும் தோற்றுதிருப்பின், மரணம் அல்லது கடும் அல்லது நீண்டகால சுகவீனம் காரணமாக (கயரோகம், பாரிசவாதம், உளக்கோளாறு, நரம்புத் தளர்ச்சி) அவருக்கு கட்டணத்தில் 90% திருப்பிக் கொடுபடும். அத்தகைய பணத்தை மீளப் பெறுதற்கான விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செய்யப்படவேண்டும்.

16. **பிரவேசச் சீட்டுகள்.**—(i) பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் அவற்றை வழங்குதல் சம்பந்தமாக புதினத்தாள்கள் மூலமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலமும் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலைக் கவனித்து அங்கு கொடுக்கப்படும் அறிவுறுத்துரைகள் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ii) பிரவேசச் சீட்டினைப் பரீட்சார்த்தி பெற்றிராவிடின் அவர் தந்திமூலம் கொழும்பு, கொம்பனி வீதி, மலாய் வீதியிலுள்ள பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (தந்தி விலாசம் : " பரீட்சை ", கொழும்பு) பின்வரும் விபரங்களை அபேட்சகர் கொடுக்க வேண்டும். நேரில் சமுகமளிக்கும் பரீட்சார்த்திகள், கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை (முன்னர் ஆட்டுப்பட்டித் தெரு) 130 ம் இலக்கத்திலுள்ள இத்திணைக்களத்தின் பிரவேசக் கிளையில் விசாரணை செய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

(அ) பரீட்சைப் பெயர் : ————.
(ஆ) அபேட்சகரின் முழுப்பெயர் : ————.
(இ) அபேட்சகரின் தபால் விலாசம் : ————.
(ஈ) அபேட்சகர் விண்ணப்பித்த பரீட்சை நிலையம் : ————.
(உ) பிரவேசப் பத்திரம் அனுப்பப்பட்ட தபாற் கந்தோர், பதிவிலக்கம், அனுப்பிய திகதி : ————.

17. **அடையாளப் பத்திரங்கள்.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாட வேளையிலும் தாம் உண்மையான பரீட்சார்த்திகள் என்பதை மேற்பார்வையாளருக்கு நிரூபித்தல் வேண்டும். பின்வரும் உறுதிப் பத்திரங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:—

(அ) தலைமைத் தபால் அதிபதியிடமிருந்து பெற்ற அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்துக்குள் பெற்ற பயனுள்ள துறைமுகஞ் செல் அனுமதிப் பத்திரம் ;

(இ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்துக்குள் ஓர் அரசாங்கப் பகுதி அதிகாரத்தின் கீழ் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது சட்ட முறையான ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் வழங்கப் பட்டதும் பரீட்சார்த்தியின் நிழற்படத்தைக் கொண்டதுமான யாதேனும் சான்றுப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது தராதரப் பத்திரம் ;

(ஈ) பாஸ்போட் அளவினதான நிழற்படம். இதன் மறுபுறத்தில், கையொப்ப பத்திரத்தில் உறுதி கூறத் தகுதிவாய்ந்த ஒருவரால் பின்வருமாறு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பின்புறத்திலுள்ள படமும் கீழேயுள்ள கையொப்பமும்.......................................................................

(பரீட்சார்த்தியின் முழுப் பெயர்)

பரீட்சார்த்தியுடையதுதான் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————, ————,
பரீட்சார்த்தியின் கையொப்பம். அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் : ————.

அந்தஸ்து : ————.

திகதி : ————.

பரீட்சை மண்டபத்திலுள்ள மேற்பார்வையாளரால் இந்நிழற் படம் வைத்துக்கொள்ளப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் ஒரு பரீட்சார்த்தி தற்காலிகமாக பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவாரெனினும் பின்னர் அவருடைய தகுதி பரீட்சாதிகாரியின் தற்றுணிபுக்கேற்ப நிராகரிக்கப்படவும் கூடும்.

18. **சாதனங்கள்.**—(i) பின்வருவனவற்றுள் சிலவேனும் எல்லாமேனும் வேண்டப்படக்கூடும் :—

(அ) பிரபல்யம் வாய்ந்த இருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நற்சாட்சிப் பத்திரங்கள். இவை சமீபகாலத்தில் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகவும் அபேட்சகரை குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு மேலாக நன்கு அறிந்தவர்களிடமிருந்தும் பெறப்படுகொள்ளப் பட்டனவாக இருக்க வேண்டும். பாடசாலைத் தலைவர்களிடமேனும் அபேட்சகர் வதியும் பட்டணத்தில் அல்லது கிராமத்தில் உள்ள உத்தியோகத்தர்களிடமேனும் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை சாலச் சிறந்தனவாகும் ;

(ஆ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் அல்லது வயதை அத்தாட்சிப்படுத்தும் விசேட பத்திரம் ;

(இ) இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்துள்ள அத்தாட்சிப் பத்திரம் அல்லது வம்சாவழியில் பிரசாவுரிமையை ஏற்றுக்கொள்வதான உத்தியோகபூர்வமான மூலக் கடிதம் (பொருத்தமான இடத்தில்) ;

(ஈ) சி. பா. த. அல்லது க. பொ. த. பத்திரம் (இவை வழங்கப்படாதவிடத்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை அல்லது பாடசாலைப் பரீட்சார்த்தியாயின் பாடசாலைத் தலைவரால் வழங்கப்படும் பெறுபேறு பற்றிய கூற்று) இக்கூற்று பரீட்சார்த்தியின் பரீட்சை நடைபெற்ற மாதம், வருடம், சுட்டிலக்கம், பாடங்கள், தரங்கள் ஆகிய முழு விபரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் ;

(உ) க. பொ. த. பத்திரம் அல்லது 8 ம் வகுப்புச் சித்தி, தேவைப்படுமிடத்து பாடசாலையால் அல்லது வித்தியா பகுதியால் வழங்கப்பட்ட முறையான, உத்தியோக பூர்வமான தராதரப்பத்திரம் அல்லது பாடசாலைத் தலைவரால, பாடசாலையின் பெயர், பரீட்சார்த்தி பாடசாலையில் படித்த காலம் ஆகிய விபரங்களைக் கொண்ட ஒரு கூற்று ;

(ஊ) யாதேனும் ஒரு பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு வேண்டிய கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் வேறு யாதேனும் அத்தாட்சிப் பத்திரம் ;

(எ) வேலைக்கமர்த்தியுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அத்தாட்சிப்பத்திரம், வேண்டியவிடத்து.

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பலாகாது. பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் நேரத்து நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு இவற்றைச் சமர்ப்பித்தற்கு ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டும். தமது தகவுத் திறனை நேர்முகப் பரீட்சையின்போது வேண்டியனவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியனவுமான சாதனங்களைச் சமர்ப்பித்து நிரூபிக்க முடியாதவர்கள் தகுதியற்றவராக்கப்படுவார்கள்.

(iii) அறிவுறுத்துரைகளை அலட்சியம் செய்து சாதனங்களைப் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பும் பரீட்சார்த்திகளின் சாதனங்கள் காணாமற் போகுமிடத்து அவற்றிற்கான பொறுப்பை இப்பகுதி ஏற்பதற்கில்லை.

(iv) பரீட்சார்த்தி அனுப்பும் சாதனங்களின் உறுதிக்கு அவரே முழுப் பொறுப்புடையவராவர். மாற்றப்பட்ட அல்லது கள்ள ஒப்பமிட்ட அல்லது உண்மையற்ற சாதனங்களைச் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

19. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் பற்றியும் பரீட்சாதிகாரி, மகா வித்தியாதிபதியுடன் கலந்தாலோசித்து தற்று ணிபுக்கேற்ப நடவடிக்கை எடுப்பார்.

கே. ரி. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 8 ந் வ.

## அட்டவணை I

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சிநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 1. | படம்வரை தொழில் பயில்வோர்–ஆரம்ப | பகல் முழுநேர–ஒரு வருடம் .. | க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்குமேற் படாது தோற்றி ஆறு பாடங்களில் சித்தி. குறித்த ஆறு பாடங்களாவன :—(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி (ஆ) கணிதம் (இ) நான்கு ஏனைய பாடங்கள்<br>அல்லது<br>கணிதத்துடன் சி. பா. த. பத்திரம் (கணிதத்தில் சித்தி வேறொரு தடவை நடைபெற்ற க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம்<br>(3) பின்வரும் பாடங்களில் யாதேனும் ஒன்று–பிரயோக கணிதம், பௌதிகம், கேத்திர கணித வடிவமுறை, பொறிமுறை வரைதல் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், கண்டி, இரத்மலானை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 2. | நில அளவையாளரும் மட்டம் பார்ப்போரும் | பகல் முழுநேர–ஒரு வருடம் .. | தூய கணிதத்தில் திறமைச் சித்தியுடனும் (அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் (ஆ) பௌதிகம் (இ) ஏனைய மூன்று பாடங்கள் ஆகியவற்றில் சாதாரண சித்தியுடனும் க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி (இவை இரு தடவைகளுக்கு மேற்படாது பெறப்பட்டிருக்கலாம்)<br>அல்லது<br>தூய கணிதத்தில் திறமைச் சித்தியுடனும் பௌதிகத்தில் சாதாரண சித்தியுடனும் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தி (தூய கணிதத்தில் திறமைச் சித்தியும் பௌதிகத்தில் சாதாரண சித்தியும் வேறொரு தடவை க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், காலி, கண்டி, வதுளை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்), ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையம், அம்பாறை (சிங்களம்/தமிழ்)—ஆண்களுக்கு மாத்திரம் வதிவிட வசதியுடன் |
| 3. | நில அளவையாளரும் மட்டம் பார்ப்போரும் | மாலை நேரம்–மூன்று வருடங்கள் | நில அளவையாளருக்கும் மட்டம் பார்ப்போருக்குமான பகல் முழுநேர பயிற்சி நெறிக்கு அமைவது போல அல்லது ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், கண்டி, வதுளை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 4. | எந்திரவியல் மாலைநேர (பொறிமுறை/மாநகர சபை/மின்சார/அமைப்பு) | மாலைநேர–மூன்று வருடங்கள் .. | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. குறித்த 6 பாடங்களாவன :—(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி (ஆ) கணிதம் (இ) பௌதிகம் (ஈ) வேறு மூன்று பாடங்கள் அல்லது கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களுடன் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தி. குறித்த இரு பாடங்களிலும் சித்தி வேறொரு தடவை க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்.<br>அல்லது<br>எந்திரவியல் விஞ்ஞானத்தில் ஆரம்பப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம்<br>(3) பிரயோக கணிதம்<br>(4) பௌதிகம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், கண்டி, இரத்மலானை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |

| பயிற்சி நெறி எண | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சிநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 5. | ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானம் .. | மாலைநேர–ஒரு வருடம் .. | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்<br>வயது: 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) ஆரம்ப கணிதம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், வதுளை, கண்டி, குருநாகல், இரத்மலானை, கேகாலை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 6. | கட்டட அமைப்பு .. | .. மாலைநேர–மூன்று வருடங்கள் .. | படம்வரை தொழில் பயில்வோர் ஆரம்ப பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>அல்லது<br>ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், வதுளை, கண்டி இரத்மலானை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) குருநாகல் (ஆங்கிலம்/சிங்களம்) |
| 7. | கட்டட அமைப்பு .. | .. பகல், பகுதிநேர–மூன்று வருடங்கள் | படம்வரை தொழில் பயில்வோர் ஆரம்ப பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம் | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், கண்டி, இரத்மலானை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 8. | மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு | .. முழுநேர–2 வருடங்கள், பகுதி நேர–2 வருடங்கள் | க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் கணிதத்தில் சித்தியுடன் அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி.<br>மேலும், ஆங்கில மொழிமூலம் பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம்<br>(3) வியாசம் | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்) |
| 9. | வர்த்தகத் தகுதித் தேர்வு | .. பகல் முழுநேர–நாலு வருடங்கள் | க. பொ. த. (உயர்தர) ப. பரீட்சையில் 4 பாடங்களில் சித்தி.<br>மேலும், ஆங்கில மொழிமூலம் பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) எண்கணிதம் " அ " அல்லது " ஆ "<br>(3) வியாசம் | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்) |
| 10. | கணக்கியல் தகுதித் தேர்வு | .. மாலைநேர–நாலு வருடங்கள் .. | (1) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டம், அல்லது<br>(2) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக இடைமானித் தராதரப் பத்திரம், அல்லது<br>(3) அப் பல்கலைக் கழகத்துப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றுதற்கு உரித்துடையதாக்கும் க. பொ. த. (உயர்தர) (லண்டன) பரீட்சைப் பத்திரம், அல்லது<br>(4) 4 பாடங்களுடன் க. பொ. த. (உயர்தர) பத்திரம், அல்லது<br>(5) இலங்கை மேற்றர பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது<br>(6) கணக்குப் பதிவாளர்க்கான உயர்தர வர்த்தக தராதரப் பத்திரம் | (1) பொது விவேகம்<br>(2) எண்கணிதம் " அ " அல்லது " ஆ "<br>(3) வியாசம் | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்), கண்டி (சிங்களம்) |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சிநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| | | | மேலும், ஆங்கில மொழிமூலப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் சி. பா. த. அல்லது க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுச்குக் குறையாதவராய் இருக்க வேண்டும்.<br>மு. கு.—செயல்முறை அனுபவம்.—விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வியாபார தாபனத்தில் அல்லது அரசாங்க அதிகார சபையில் அல்லது நிலையத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதுடன் கணக்கு, கணக்குப் பரிசோதனை அல்லது தொடர்புபட்ட தன்மைய வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும். | | |
| 11. | செயலாண்மை உயர்தொழில் பயிற்சி நெறி | (1) பகல் முழுநேர—4 வருடங்கள்<br>(2) மாலை பகுதிநேர—4 வருடங்கள் | பின்வருவனவற்றுள் ஒன்று—<br>(1) எண்டன் மற்றிக்குலேசன்.<br>(2) ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்திகள் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்திகள் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி அங்கீகரிக்கப்பட்ட 6 பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் சித்தி ; குறைந்த பட்சம் 4 திறமைச் சித்திகள் ஒரே முறையில் பெற்றிருக்கப்பட வேண்டும்.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் " அ " அல்லது " ஆ "<br>(3) வியாசம் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்) |
| 12. | வங்கிமுறை உயர்தொழில் பயிற்சி நெறி | மாலை நேரம்—மூன்று வருடங்கள் | (1) ஆங்கிலத்திலும் கணிதத்திலும்/எண்கணிதத்திலும்/வர்த்தக எண் கணிதத்திலும் சித்தியுடன் இலங்கை சி. பா. த. (ஆங்கில) பத்திரம்<br>அல்லது<br>(2) ஆங்கிலத்திலும் கணிதத்திலும்/எண்கணிதத்திலும்/வர்த்தக எண் கணிதத்திலும் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி இலங்கை க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.<br>மு. கு.—விண்ணப்பதாரி எண்டன், வங்கியாளர்கள் நிலையத்தின் ஒரு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையிலுள்ள ஒரு வங்கியில் வேலை செய்பவராக இருக்க வேண்டும்.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் " அ " அல்லது " ஆ "<br>(3) வியாசம் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்) |
| 13. | செலவினக் கணக்கியல் உயர்தொழிற் பயிற்சி நெறி | (1) பகல் முழுநேரம் ..<br>(2) மாலை—பகுதி நேரம் | (1) கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு, இலங்கை சி. பா. த. (ஆங்கில) பத்திரம்<br>அல்லது<br>(2) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, ஆங்கிலத்திலும் கணிதத்திலும் திறமைச் சித்திகள் உட்பட 5 பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) பத்திரம்<br>அல்லது<br>(3) செலவின, வேலைக் கணக்காளர் நிலையத்தில் மாணவராயிருத்தல்.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம்<br>(3) வியாசம் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்) |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சிநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| *14. | கணக்குப் பதிவாளர் வர்த்தகத் தராதரப் பத்திரம் | பகல் நேர—ஒரு வருடம் .. | எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதமும் சிங்கள மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி, (சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு). எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதமும் தமிழ் மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி, (தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு). எண்கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது கணிதமும் ஆங்கில மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி (ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கு)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் " அ " அல்லது " ஆ "<br>(3) வியாசம் (மாணவர்கள் தமக்குரிய சொந்த மொழி மூலம் இதற்குத் தோற்ற வேண்டும் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், வதுளை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 15. | கணக்குப் பதிவாளர் வர்த்தக தராதரப் பத்திரம் | மாலை நேர (அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையத்தில் அல்லது அரசாங்கப் பகுதியில் அல்லது ஸ்தல அதிகார சபையில் அல்லது வேறு யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தொழில் புரிபவர்களுக்கு மட்டுமே) | 14 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல.<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | 14 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் வதுளை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| *16. | சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் வர்த்தகத் தராதரப் பத்திரம் | பகல் நேர—ஒரு வருடம் .. | 14 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | 14 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள்; வதுளை, காலி, குருநாகல் (சிங்களம்/ஆங்கிலம்), கண்டி, கேகாலை (சிங்களம்) யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 17. | ஷை .. | மாலை நேர (அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையத்தில் அல்லது அரசாங்கப் பகுதியில் அல்லது ஸ்தல அதிகார சபையில் அல்லது வேறு யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தொழில் புரிபவர்களுக்கு மட்டும்) | ஷை | ஷை ஷை .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், பதுளை, குருநாகல் (சிங்களம்/ஆங்கிலம்), யாழ்ப்பாணம் (தமிழ்) கண்டி (சிங்களம்) |

*14 ஆம், 16 ஆம் இலக்கப் பயிற்சி நெறிகளை மாணவர்கள் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் அவர்கள் கணக்குப் பதிவாளர்க்கான உயர்தர வர்த்தகப் பத்திர நெறியையேனும் சுருக்குத் தட்டெழுத்தாளர்க்கான உயர்தர வர்த்தகப் பத்திர நெறியையேனும் அல்லது இவ்விரண்டையும் பின்பற்றலாம் (ஒரு வருட பகல் நேர வகுப்பு). மேலும், இரு பயிற்சி நெறிகளையும் ஒரே நேரத்தில் பின்பற்றுதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**மிக முக்கியம்.**—பின்னேரப் பயிற்சி நெறி, யாதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம்.

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்செநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 18. | விற்பனையியலும் விற்பனை முகாமையும் | போயா–முன் தினங்களில் மட்டும் ஒரு வருடம் (பின்னேரங்களில்) விற்பனை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் | சிங்கள/ஆங்கில மொழி உட்பட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் சித்தி, (சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழியும் ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கு ஆங்கில மொழியும்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) வியாசம் (சிங்கள மொழி மூல மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் ஆங்கில மொழிமூல மாணவர்கள் ஆங்கில மொழி மூலமும் இதற்குத் தோற்ற வேண்டும்) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்) |
| 19. | சுருக்குத் தட்டெழுத்தாளர் தராதரப் பத்திரம் | பகல்நேர–ஒரு வருடம் .. | 18 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல. (தமிழ் மொழி மூல மாணவர்கள் க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் தமிழில் சித்தி அடைந்திருக்க வேண்டும்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | 18 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல தமிழ் மொழி மூல மாணவர்கள் தமிழ் மொழி மூலம் வியாசத்துக்குத் தோற்ற வேண்டும் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையம், யாழ்ப்பாணம் (தமிழ்/ஆங்கிலம்) |
| 20. | சுருக்குத் தட்டெழுத்தாளர் தராதரப் பத்திரம் | மாலைநேர–ஒரு வருடம் (இத்துறையில் அல்லது இதனுடன் தொடர்புபட்ட துறைகளில் கடமை புரிபவர்களுக்கு மாத்திரமே) | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி (சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கு முறையே சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) வியாசம் (மாணவர்கள் தமக்குரிய சொந்த மொழி மூலம் இதற்குத் தோற்ற வேண்டும் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், கண்டி (சிங்களம்), யாழ்ப்பாணம் (ஆங்கிலம்/தமிழ்) |
| 21. | பொறிப்படுத்தல் I .. | பகல் முழுநேர–2 வருடங்கள் .. | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு.<br>வயது : 1.10.71 அன்று 18 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும். | (1) பொறிமுறை பற்றிய பொது அறிவு<br>(2) எண்கணிதம் " இ " | I, II, III, IV, VI என இலக்கமிடப்பட்ட பயிற்சி நெறிகள் அனுராதபுரம், வதுளை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களிலும் மருதானை, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியிலும் சிங்களம் மூலமும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ் மூலமும் நடாத்தப்படும். V என இலக்கமிடப்பட்ட பயிற்சி நெறி அனுராதபுரம், குருநாகல், இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையஙகளில் சிங்களம் மூலம் நடாத்தப்படும். VII, VIII, IX என இலக்கமிடப்பட்ட பயிற்சி நெறிகள் இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்திலும் X என இலக்கமிடப்பட்ட பயிற்சிநெறி மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கலலூரியிலும் சிங்களம் மூலம் நடாத்தப்படும். |
| 22. | தன்னியக்கப் பொறியியல் II (மோட்டார் பொறிநுட்பவியல்) | | | | |
| 23. | தச்சுவேலையும் மூட்டுவேலையும் III | | | | |
| 24. | கட்டடங்களில் மின்சார இணைப்புகள் IV | | | | |
| 25. | மேசன் வேலை V | | | | |
| 26. | பொருத்துதல் VI | | | | |
| 27. | தகட்டு உலோக வேலை VII | | | | |
| 28. | பேழை செய்தல் VIII | | | | |
| 29. | மின்சாரப் பொறியியல் IX | | | | |
| 30. | வானொலிப் பொறியியலும் இலத்திரனியலும் X | | | | |
| 31. | நீர்க்குழாய் தொழில் .. | பகுதிநேர–மாலை ஒரு வருடம் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (அரசினர் அல்லது ஸ்தல ஆட்சிச் சபை சேவையில் உள்ளவர்களுக்கு இத்தேவையிலிருந்து தவிர்வு அளிக்கப்படலாம்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது எந்திரவியல் அறிவு ..<br>(2) எண்கணிதம் " இ " | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், குருநாகல், கண்டி, பதுளை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சிநெறி நடைபெறும் தாபனங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 32. | மணிக்கூடு திருத்தல் .. | .. பகுதி நேர-மாலை ஒரு வருடம் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (அரசினர் அல்லது ஸ்தல ஆட்சிச் சபை சேவையில் உள்ளவர்களுக்கு இத்தேவையிலிருந்து தவிர்வு அளிக்கப்படலாம்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது எந்திரவியல் அறிவு<br>(2) எண்கணிதம் "இ" | .. கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கண்டி (சிங்களம்) |
| 33. | வானொலி பேணல் | .. ஷை .. | ஷை | ஷை ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், குருநாகல், கண்டி, கேகாலை (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 34. | மின்கம்பி இணைத்தல் | .. பகுதி நேர-மாலை ஒரு வருடம் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | ஷை | ஷை ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்), கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், பதுளை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல் (சிங்களம்), யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 35. | கோர்த்தல் .. | .. பகுதிநேர-மாலை மூன்று வருடங்கள் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | ஷை | ஷை ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) |
| 36. | லெற்றர் பிறெஸ் எந்திரவேலை | .. ஷை .. | ஷை | ஷை ஷை | .. ஷை ஷை ஷை |
| 37. | புத்தகம் கட்டும் வேலை | .. ஷை .. | ஷை | ஷை ஷை | .. ஷை ஷை ஷை |
| 38. | தச்சு வரைதல் .. | .. ஷை .. | ஷை | ஷை ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், கண்டி, குருநாகல், பதுளை (சிங்களம்) |
| 39. | பொருத்துதல் .. | .. பகுதிநேர-மாலை மூன்று வருடங்கள் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (அரசினர் அல்லது ஸ்தல ஆட்சிச் சபை சேவையில் உள்ளவர்களுக்கு இத்தேவையிலிருந்து தவிர்வு அளிக்கப்படலாம்)<br>வயது : 1.10.71 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது எந்திரவியல் அறிவு<br>(2) எண்கணிதம் "இ" | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், யாழ்ப்பாணம் (தமிழ்), குருநாகல், கண்டி (சிங்களம்) |
| 40. | பொறிப்படுத்துதல் | .. ஷை .. | ஷை | ஷை ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், யாழ்ப்பாணம் (தமிழ்), கண்டி, குருநாகல் (சிங்களம்) |

## இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்புக்கு நியமனம் செய்வதற்குரிய வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை—1970

இலங்கை நிருவாக சேவைக் குறிப்பின் 23 ஆம் பந்திக்கிணங்க வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கொழும்பில் 1971 ஆம் ஆண்டு எப்பிரல் மாத அளவில் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் உள்ளபடியான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும். பொது மக்களின் நலனுக்கு அவசியமானதென அரசாங்க சேவை ஆணைக்குழு கருதுமாயின் பரீட்சை நடத்தாமல் விட்டுவிடும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு. அரசாங்க சேவை ஆணைக்குழு அவசியமானதென அல்லது அறிவுக்கிசைந்ததெனக் கருதினால் பரீட்சையைத் தள்ளிப்போடலாம்.

2. **வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கை.**—(அ) இப்பரீட்சையின் பெறுபேற்றிலிருந்து நிரப்பப்பட வேண்டியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 என மதிப்பிடப்படுகின்றது. பொது மக்களின் நலனுக்கு அவசியமானதெனக் கருதினால், எந்தவொரு வெற்றுப் பதவியையேனும் அல்லது எல்லா வெற்றுப் பதவிகளையேனும் அரசாங்க சேவை ஆணைக்குழு நிரப்பாது விடலாம்.

(ஆ) நியமனம் செய்யப்படும் காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரசகருமமொழிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய நியமனங்களுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டால் சித்தியடைந்த பரீட்சார்த்திகளில் ஒருவரையேனும் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரையேனும் அங்ஙனம் நியமிக்காதுவிடும் உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளதாகும்.

3. **விண்ணப்பஞ் செய்யும் முறை.**—(அ) விண்ணப்பங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் எழுதப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு என முகவரியிடப்பட்டு அவ்வலுவலகத்தை 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். அத் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் சகல விதத்திலும் சரியாகவுள்ளதென்பதையும் விண்ணப்பப்படிவத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சான்றிதழில் தாம் கையொப்பமிட்டுள்ளாரென்பதையும் திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(இ) இப்பரீட்சைக்குரிய கட்டணம் 50/– ரூபாவாகும். இக்கட்டணம் விண்ணப்பம் முடிவடையுந் தேதிக்கு முன்னர் சமீபத்திலுள்ள கச்சேரிகளில் அல்லது கொழும்பு பொதுத்திறைசேரியில் செலுத்தப்படல் வேண்டும். இக்கட்டணம் தலைப்பு VI, உப–தலைப்பு 3, (இனம் 4) என்பதில் இறைவரிக்கு வரவு வைக்கப்படல் வேண்டும். கச்சேரியினது அல்லது திறைசேரியினது பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தால் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றாமல்விடின் அல்லது விண்ணப்பத்தை மீளப்பெறின் அப்பரீட்சார்த்தி கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் மீளப் பெறுதற்கு உரிமையுடையவராகார்.

(ஈ) ஒரு விண்ணப்பப்பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணாமற்போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவாராயின் அது அவர்கள் பொறுப்பாகும்.

(உ) விண்ணப்பப் பத்திரங்களுடன் வழங்கப்படும் அச்சடிக்கப்பட்ட அஞ்சல் அட்டையை ("அ" அடையாளமிடப்பட்டது) அதில் அறிவுறுத்தப்பட்டவாறு பூரணப்படுத்தி விண்ணப்பப்பத்திரத்துடன் அனுப்புமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். இவ்வலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பம் பெறப்பட்டமை அவ்வஞ்சல் அட்டை மூலம் அறிவிக்கப்படும். இந்நியதிக்கமையாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இந்த நியதிக்கமைய ஒழுகி, ஆனால், விண்ணப்பம் முடிவடையுந் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் ஒப்புகோடல் அறிவித்தலைப் பெறாத பரீட்சார்த்திகள், அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனடியாக அறிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர். இந்த நியதிக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் மறுபரிசீலனை எதுவும் செய்வதற்குக் கோரும் தகுதியை இழப்பர்.

4. பரீட்சார்த்தி எவரும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஐந்து தடவைகளுக்கு மேல் தோற்ற உரிமையற்றவராவர்.

5. **தகவுத்திறன்.**—பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றலாம் :—

(அ) 1970 டிசெம்பர் 31 ஆந் தேதியன்று அரசாங்கத்தின்கீழ் 15 ஆண்டு நிரந்தரச் சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் அத்தேதியில் ஆண்டுக்கு 5,304/– ரூபாவுக்குக் குறையாமல் திரட்டிய சம்பளம் பெறுபவர்களுமாகிய, பின்வரும் எழுதுவினைஞர்கள் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் :

பொது எழுதுவினைஞர் சேவை
இலங்கைச் சேமிப்பு வங்கி எழுதுவினைஞர் சேவை
இறப்பர் கட்டுப்பாட்டு எழுதுவினைஞர் சேவை
தேயிலைக் கட்டுப்பாட்டு எழுதுவினைஞர் சேவை
அரசாங்க அச்சக எழுதுவினைஞர் சேவை
ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவை
கல்வி எழுதுவினைஞர்கள்
துறைமுக பொறியியலாளர் எழுதுவினைஞர் சேவை
புகையிரத எழுதுவினைஞர் சேவை.

(ஆ) 1970 டிசெம்பர் 31 ஆந் தேதியன்று அரசாங்கத்தின் கீழ் 10 ஆண்டு நிரந்தரச் சேவையைப் பூர்த்தி செய்வதவர்களும் அத்தேதியில் ஆண்டுக்கு 5880/– ரூபாவுக்குக் குறையாமல் திரட்டிய சம்பளம் பெறுபவர்களுமாகிய, பின்வரும் திணைக்களத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் :—

| திணைக்களம் | பதவி |
|---|---|
| கமத்தொழில் சேவைகள் .. .. .. | மாவட்ட உத்தியோகத்தர்கள் |
| சமூக சேவை .. .. .. | அரசாங்க வயோதிபர், உடல்வலியற்றோர் விடுதிகளின் அத்தியட்சகர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் |
| கூட்டுறவு .. .. .. | கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்கள் |
| பரீட்சை .. .. .. | பரீட்சை உதவி அத்தியட்சகர்கள் |
| தொழில் .. .. .. | தொழில் உத்தியோகத்தர், தொழில்காண் நிலைய முகாமையாளர், கூலி நிருணயச்சபைச் செயலாளர் |
| உள்ளூராட்சி .. .. .. | பரிசோதகர், கிராமக் கட்டுவேலை அத்தியட்சர், நுண்ணாய்வு உத்தியோகத்தர் |
| சந்தைப்படுத்தல் .. | மாவட்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் |
| கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் .. | 1 ஆந் தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சிரேட்ட மேற்பார்வையாளர், புடவைவகை உதவியாளர், சிரேட்ட கிராம அபிவிருத்தி உதவியாளர்கள், கைத்தொழில் உதவியாளர், கிராம அபிவிருத்தி உதவியாளர் |
| உணவு .. .. .. | உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள், சாமர்ஸ் தானியக் களஞ்சியத் தடை உத்தியோகத்தர், தானிய அளவையாளர் |

| திணைக்களம் | பதவி |
|---|---|
| காணி ஆணையாளர் .. .. | குடியேற்ற உத்தியோகத்தர், மேற்பார்வையாளர்கள்—கா. அ. க. துண்டுகள், கச்சேரி நில அளவையாளர் |
| மோட்டார் போக்குவரத்து .. .. | மோட்டார் வாகனப் பரீட்சகர் |
| பொதுத் திறைசேரி .. .. | ஆய்வு உத்தியோகத்தர்கள் |
| குடிவரவு, குடியகல்வு .. .. | அதிகாரம் பெற்ற சிரேட்ட உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் |
| தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் .. | மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர், போதனாசிரியர்/பரிசோதகர் |
| சுகாதாரம் .. .. .. | ஆசுபத்திரிச் செயலாளர்கள், செயலாளர், கொழும்புத் தொகுதி ஆசுப்பத்திரிகள் |
| நன்னடத்தைப் பாதுகாவலும் குழந்தை பேணற் சேவைகளும் .. .. | பாடசாலை அதிபர், பாடசாலைத் தலைவிகள், விடுதி அதிபர்கள், விடுதித் தலைவிகள், நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள், மாணவர் இல்ல மேற்பார்வையாளர்கள் |
| ஆயுள்வேதம் .. .. | வைத்தியசாலைச் செயலாளர் |
| இரப்பர் கட்டுப்பாடு .. .. | பரிசோதகர்கள் |
| கடற்றொழில் .. .. .. | கடற்றொழில் உதவியாளர்கள் |

(இ) வேறு எந்த உத்தியோகத்தரையும் இப் பரீட்சையில் போட்டியிட அனுமதிக்கும் உரிமையை அரசாங்கசேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

6. **அடையாளச் சீட்டுக்கள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நியதிச் சட்ட முறையான தாபனம் ஒன்றின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

7. **பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.**—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்வதற்கு ஏதுவாகும். பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்குட்பட்ட பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

8. (அ) **பரீட்சைத் திட்டம்.**—பின்வரும் பாடங்களை எடுக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர் :

| | கட்டாய பாடங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | கட்டுரை (இரண்டு மணித்தியாலம்) .. .. .. .. | 150 |
| (2) | சுருக்கியெழுதல் (ஒரு மணித்தியாலம்) .. .. .. .. | 50 |
| (3) | தற்கால நிகழ்ச்சிகள் (ஒரு மணித்தியாலம்) .. .. .. .. | 100 |
| (4) | பொது அறிவு (இரண்டு மணித்தியாலம்) .. .. .. .. | 100 |
| (5) | இலங்கையின், சமூக அரசியல், பொருளாதார அபிவிருத்தி, இத்துறைகளில் தற்கால இலங்கையின் அபிவிருத்திபற்றி விசேடமாக அறிந்திருத்தல் வேண்டும் (இரண்டு மணித்தியாலம்) .. | 100 |
| (6) | வாய்மொழிப் பரீட்சை .. .. .. .. .. எழுத்துப்பரீட்சையில் போதியளவு உயர்தரம்பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் | 200 |
| (7) | விருப்புரிமைப் பாடம் .. .. .. .. .. | 100 |

பின்வரும் விருப்புரிமைப் பாடங்களில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர். விருப்புரிமைப் பாட வினாத்தாள் இரண்டு மணித்தியாலத்துக்குள்ளதாகும். அவ்வினாத்தாள் சிறப்பாக இலங்கை தொடர்பாகவே இருக்கும். அவ் வினாத்தாளின் விரிவுக்குள் அடங்கியவாறு அரசாங்கத் திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் தொழில்படும் முறைபற்றியும் அவற்றின் பிரச்சினைகள் பற்றியும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும்வண்ணம் அவ்வினாத்தாள் அமையும் :—

(1) கைத்தொழில், வர்த்தகம், வியாபாரம்.
(2) அரசாங்க நிதித்துறை.
(3) கூட்டுறவு விவசாயம்.
(4) தற்கால இலங்கை அரசாங்கம்.
(5) கல்வி, பண்பாட்டு அலுவல்கள்.
(6) சுகாதாரம், தொழில், சமூக சேவை.
(7) போக்குவரத்தும் அரசாங்கப் பயன்படுதுறைகளும்.
(8) இலங்கையின் சட்ட முறையும் ஒப்பந்தங்கள், குடியியல் குற்றங்கள்பற்றிய சட்டமும் அல்லது ஆட்கள், சொத்துக்கள் பற்றிய சட்டமும்.
(9) பொது விஞ்ஞானம்.

**மு. க.**—பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டுவதற்காக, மேற்கூறப்பட்ட விருப்புரிமைப் பாடங்களின் கீழ் பொதுவாகத் தொகுக்கப்படும் அரசாங்கத் திணைக்களங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) **கைத்தொழில், வர்த்தகம், வியாபாரம்.**—வர்த்தகத் திணைக்களம், இறக்குமதி, ஏற்றுமதித் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், வணிகக் கப்பல் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம், கொம்பனிப் பதிவாளர் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், சிறு கைத்தொழில் திணைக்களம்.

(2) **அரசாங்க நிதித்துறை.**—திறைசேரி, அரசாங்கப் பண்டசாலை, உண்ணாட்டு இறைவரி, தொகை மதிப்பு,புள்ளிவிவரம்,தேசிய திட்டமிடல், உபகாரச் சம்பளம், பொதுப்படுகடன், கடன் உதவு சபை, அரசாங்க அச்சகம், தேசிய சேமிப்பு, சகாயநிதி, சுங்கம்.

(3) **கூட்டுறவு, விவசாயம்.**—காணி, நில அளவை, காடு, நீர்ப்பாசனம், வன சீவராசி, விலங்கினச் காட்சிச்சாலை, விவசாயம், உணவு, கூட்டுறவு, கமத்தொழில் சேவை, சந்தைப்படுத்தல், தென்னை மறுசீரமைப்பு, விலைமதிப்பு.

(4) **தற்கால இலங்கை அரசாங்கம்.**—அமைச்சர் சபை அலுவலகம், மூதவை, பிரதிநிதிகள் சபை, கணக்குப் பரிசோதனைத் திணைக்களம், தேர்தல் திணைக்களம், மாகாணப் பரிபாலனம், உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கண்டி சிறுநிலக் கமக்காரர் விசாரணைக்குழு, நாடு, நகர்த் திட்ட அமைப்பு, பதிவாளர் நாயகம், பொலிசு, மதுவரி, வெளிநாட்டு அலுவல்கள், குடிவரவு, குடியகல்வு, படைப் பிரிவுகள்.

(5) **கல்வி, பண்பாட்டு அலுவல்கள்.**—கல்வித் திணைக்களம், தொழில் நுட்பக் கல்லூரித் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், வளி மண்டல ஆராய்ச்சித் திணைக்களம், நுண்கலைக் கல்லூரித் திணைக்களம், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், அரசாங்கப் பொதுச் சுவடித் திணைக்களம், தேசிய நூதனசாலைத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், அடிப்படைத் தொழில் நுட்பப் பயிற்சிக் கழகம், ஒலிபரப்பு, தகவல் திணைக்களம்.

(6) **சுகாதாரம், தொழில், சமூக சேவை.**—சுகாதாரம், வீடமைப்பு, ஆயுர்வேதம், தொழில், சமூக சேவை. நன்நடத்தைப் பாதுகாவல் குழந்தை பேணற் திணைக்களம், சிறைச்சாலை.

(7) **போக்குவரத்து, அரசாங்கப் பயன்படுதுறைகள்.**—அரசாங்கக் கட்டுவேலைகள், அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்து மோட்டார் போக்குவரத்து, புகைவண்டி, குடியியல் விமானப் போக்குவரத்து, கப்பற்றுறை ஆணையாளர், கரையோர வெளிச்சம், நீர் விநியோகம், வடிகால், மின்சக்தி.

(8) **இலங்கையின் சட்டமுறை.**—நீதி மன்றங்கள், பிசுக்கால், இணக்கச் சபைகள், கைலஞ்ச ஆணையாளர், அரசாங்க இரசாயனப் பகுப் பாளர், பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர், பள்ளிவாசல், முசிலிம், தர்ம நம்பிக்கைச்சொத்துத் திணைக்களம்.

(ஆ) **பரீட்சை மொழி.**—எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள், அத்தகைய சேவையில் சேர்வதற்குரிய தகைமைப் பரீட்சையை/வாய் மொழிப் பரீட்சையை எம்மொழியில் செய்து சித்தியடைந்தார்களோ அம்மொழியிலேயே இப் பரீட்சையில் விடை எழுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட தகைமைப் பரீட்சையை/வாய்மொழிப் பரீட்சையை வேறுவழியில் செய்து சித்தியடைந்தவர்கள் அவர்கள் அவ்வாறு விரும்பினால் அரசகரும மொழியில்—சிங்களத்தில் இப்பரீட்சையில் விடை எழுதலாம். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் பாடத் தெரிவிலும், மொழி மூலத்திலும் மாற்றம் எதுவும் அநுமதிக்கப்படமாட்டார்கள்.

9. இச் செய்திமடலின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளின் நியமனங்களுக்கு, பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவம்பர் மீ 24 ந் வ.

12–644—18.12.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,937

---

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை—(சாதாரண பயிற்சி) சிங்களம்/தமிழ்—1971

1. பொது

இப்பரீட்சை சம்பந்தமான பிரமாணங்கள் கல்விப் பகுதியினருடன் கலந்து ஆலோசித்து வகுக்கப்பட்டனவாகும். இப்பரீட்சை மகா கல்விய திபதியின் சார்பில் பரீட்சாதிகாரியினால் நடத்தப்படும்.

இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, சேவையிலிருக்கும் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களும், தராதரப் பத்திரம் பெறாத நிரந்தர ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும், சிங்கள சாதாரண பயிற்சிக்கும், தமிழ் சாதாரண பயிற்சிக்கும், தமிழ் மொழிமூலம் முஸ்லீம் பரீட் சார்த்திகளுக்கான சாதாரண பயிற்சிக்கும் அனுமதிக்கப்படுவர்.

2. பரீட்சை நடைபெறும் தேதி

இப்பரீட்சை 1971 மார்ச் 24 ஆந் திகதி தொடக்கம் நடைபெறும்.

3. பரீட்சை இடங்கள்

(1) இப்பரீட்சை கீழ்க்காணும் இடங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

**மேல் மாகாணம்**

அவிசாவலை, கொழும்பு, தொம்பே, கம்பஹா, அங்வெல்லை, ஹொறணை, இங்கிரியா, ஜாஎலை, களுத்துறை, கிரிந்திவெலை, கிரில்லவெலை, மத்துகாமம், மினுவாங்கொடை, மீரிகாமம், நீர்கொழும்பு, நுகேகொடை, பாதுக்கை, பயாகலை, பாணந்துறை, பஸ்யாலை, பிலியந்தலை, வியாங்கொடை, வாதுவை.

**தென் மாகாணம்**

அக்குரஸ, அம்பலாங்கொடை, பலப்பிட்டி, பெலியத்த, பெந்தோட்டை, தெனியாய, எல்பிட்டி, கொட்டஉடை, காலி, கிக்கடுவை, மாத்தறை, தங்காலை, வந்துரம்பை, அம்பாந்தோட்டை, தெலிச்சவில, உடுகம, வெலிகாமம்.

**மத்திய மாகாணம்**

தம்புல்லை, கலகெதர, கம்பளை, கடுகண்ணாவை, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, நில்தண்டாஹின்னை, நுவரெலியா, போராதனை, தலவாக் கொல்லை, பொறமதுளை, உடப்புசலாவை.

**வடமேல் மாகாணம்**

வளல்லை, சிலாபம், குளியாப்பிட்டி, குருநாகல், நாரம்மல, நாத்தாண்டி, பொல்காவலை, சந்தலங்காவ, வாரியப்பொளை, புத்தளம், கல்கமுவ, நிக்கவரட்டிய.

**வட மாகாணம்**

சாவகச்சேரி, இளவாலை, யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, வவுனியா, மன்னார்.

**கிழ் மாகாணம்**

அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை, திரிகோணமலை, மூதூர், அக்கரைப்பற்று.

**வடமத்திய மாகாணம்**

அனுராதபுரம், கெக்கிராவ, பொல்லநறுவை.

**ஊவா மாகாணம்**

வதுளை, பண்டாரவளை, பிபிளை, அப்புத்தளை, பசறை, வெளிமடை, மொனறாகலை.

**சப்பிரகமுவா மாகாணம்**

எகலியக்கொடை, கொடக்கவெலே, கேகாலை, மாவனல்லை, பெல்மதுளை, றம்புக்கனை, இரத்தினபுரி, ரூவான்வலை, தொலங்கமுவை.

(ii) பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்படும் பரீட்சை இடங்கள் அவர்கள் வசிக்கும் இடத்துக்கோ அல்லது சேவை செய்யும் இடத்துக்கோ சமீபத்திலுள்ள பரீட்சை இடமாயிருத்தல் வேண்டும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத பரீட்சை இடங்கள் நீக்கப்படும்.

(iii) பரீட்சார்த்தியால் முதலில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சை இடம் சாதாரணமாக மாற்றப்படமாட்டாது. எனினும், வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டிருத்தல் போன்ற விசேஷ கஷ்டங்கள் ஏற்பட்டிருக்குமிடத்து போதிய அளவு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பின் அதற்கிணங்கப் பரீட்சை இடங்களை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படும்.

(iv) கவனிக்க

எக்காரணத்தை முன்னிட்டாவது இப்பகுதியினல் பரீட்சார்த்திக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தை விட்டுவிட்டு வேறு பரீட்சை மண்டபம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

**4. தகைமை**

(அ) பொதுத் தகைமை

(i) நல்லொழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும் ;
(ii) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
(iii) 1972 ஜனவரி 1 ஆம் தேதியன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;
(iv) அரசாங்கப் பாடசாலையொன்றில அல்லது கல்வியதிகாரியினுடைய முகாமையிலுள்ள பாடசாலையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனித்தியங்கும் பாடசாலையொன்றில் நிரந்தர ஆசிரிய சேவையிலுள்ளவராயிருத்தல் வேண்டும் அல்லாவிடின் மாணவ ஆசிரியராக நியமனம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

**கவனிக்க**

(i) அங்கீகரிக்கப்பட்ட தனித்தியங்கும் பாடசாலைகள் என்பது 1951 இலிருந்து கட்டணம் அறவிடும் பாடசாலைகளாய் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளாகவும், 1960.12.1 ஆந் தேதியிலிருந்து கட்டணம் அறவிடாத தனித்தியங்கும் பாடசாலைகளாகவும் உள்ள I ஆம் II ஆம் தரப் பாடசாலைகள் ஆகும்.

(ii) பயிற்சி முடிந்ததன் பின்னர் அவர்கள் முன்னர் சேவை செய்த அதே பாடசாலையில் அவர்களுக்கு நியமனமளிக்கப்படும். பயிற்சியின் போது அவர்களுக்கு வேதனமோ அன்றேல் வாழ்க்கைப்படியோ அளிக்கப்படும் என்பதற்கான சான்றுகள் நேர்முகப் பரீட்சைச் சபையினரின் முன்பு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**(ஆ) கல்வித் தகைமைகள்**

(i) இலங்கைப் பாடசாலைச் சிரேஷ்ட தராதரப் பத்திரம் அல்லது இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் தமிழ்ப்பாஷை, எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட ஆறு பாடங்களில், இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்து பெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பத்திரம்.

**கவனிக்க**

சிங்கள மொழிமூலம் போதிக்கும் ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெறுவதற்குச் சிங்களப் பாஷையினும், தமிழ் மொழி மூலம் போதிக்கும் ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெறுவதற்குத் தமிழ்ப் பாஷையினும் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்வித் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**5. பரீட்சைத் திட்டம்**

(i) இப்பரீட்சை எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என இரு பகுதிகளைக் கொண்டதாகும். எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி தெரிவு செய்யப்பட்டவர்கள் மகா கல்வி அதிபதியினல் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) எழுத்துப் பரீட்சை பின்வரும் வினாப் பத்திரங்களைக் கொண்டதாயிருக்கும். இலங்கைச் சரித்திரம், இலங்கைப் புவியியல் என்னும் இரண்டையும் கொண்ட வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | சிங்கள/தமிழ்ப் பாஷை 3 மணி .. .. .. .. | 150 புள்ளிகள் |
| 2. | எண்கணிதம் (சிங்களம்/தமிழ்) $1\frac{1}{2}$ மணி .. .. .. | 100 புள்ளிகள் |
| 3. | இலங்கைச் சரித்திரமும் இலங்கைப் புவியியலும் (சிங்களம்/தமிழ்) $1\frac{1}{2}$ மணி .. | 100 புள்ளிகள் |
| 4. | விவேகப் பரீட்சை (சிங்களம்/தமிழ்) $\frac{1}{2}$ மணி .. .. .. | 100 புள்ளிகள் |

(iii) சிங்கள/தமிழ்ப் பாஷை, எண்கணிதம் என்பனவற்றுக்கான பாடத்திட்டங்கள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களையொத்தனவாகும். ஆனல், வினாப் பத்திரம் அதனிலும் பார்க்க உயர்ந்த தரத்தையுடையதாயிருக்கும். இவ்வினாப் பத்திரங்களின் அமைப்புமுறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) ப் பரீட்சையில் வழங்கப்படும் வினாப் பத்திரங்களின் அமைப்பு முறையினும் பார்க்க மிகவும் வேறுபட்டதாயிருக்கும். இலங்கைச் சரித்திரமும் இலங்கைப் புவியியலும் சம்பந்தமான பாடத்திட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### பகுதி அ—இலங்கைச் சரித்திரம்

ஆதிகாலத்திலிருந்து இன்று வரைக்கும் இலங்கைச் சரித்திரம் பற்றிய பொதுவான அறிவு, பின்வருவன பற்றி விசேட அறிவு எதிர்பார்க்கப்படும் :—

(1) இலங்கைச் சரித்திரத்துக்கு புவியியல் பயன்பட்டமை.

(2) முற்காலச் சிங்களக் குடியேற்றங்கள்.

(3) அனுராதபுர ராஜதானியின் தோற்றமும் வீழ்ச்சியும்.
மகிந்தனின் வருகையும் பௌத்த சமயம் பரவுதலும், அனுராதபுர காலத்தில் பரிபாலனம், நீர்ப்பாய்ச்சலும் நீர்வசதியும், வியாபாரம்—இலக்கியம்—கட்டடக்கலை—ஓவியக்கலை—பிறநாட்டுத் தொடர்புகள்.

(4) பொலன்னறுவை இராஜதானியின் தோற்றமும் வீழ்ச்சியும். 1 வது விஜயபாகு, மகா பராக்கிரமபாகு, பிறநாட்டுப் படையெடுப்பு, அரசாங்கம், பரிபாலனம்பற்றிய முறைகள், பௌத்த சமயமும் இந்துசமயமும்—இலக்கியம்—கட்டடக்கலை—சிற்பக்கலை—ஓவியக்கலை—பிறநாட்டுத் தொடர்புகள்.

(5) தென்மேற்குப் பகுதிக்கு ராஜதானிகள் கொண்டு செல்லப்படல். தம்பதெனியா, குருநாகல், கம்பளை, யாப்பகுவை, கோட்டை இராஜதானிகள். 2 வது 6 வது பராக்கிரமபாகு அரசர்கள், வடக்கிலிருந்த தமிழ் இராஜதானி, பௌத்த சமயம், வியாபாரம், இலக்கியம், கட்டடக்கலை.

(6) கிழக்கில் போர்த்துக்கேயர் ஆதிக்கம் விரிவடைதல். இலங்கை அரசர்களுடன் இருந்த தொடர்புகள், அவர்களின் வலிமைகுன்றுதலும் வெளியே துரத்தப்படுதலும், அவர்களுடைய பரிபாலனம், வியாபாரம், கல்வி, சமயம், கோட்டை இராச்சியம் அழிந்துபோகுதல், சீதாவாக்கையின் தோற்றமும் வீழ்ச்சியும், மலைநாட்டு இராஜதானியின் தோற்றம்.

(7) கிழக்கில் ஒல்லாந்தர் ஆதிக்கம் விரிவடைதல், இலங்கை அரசர்களுடன் இருந்த தொடர்புகள், அவர்களுடைய பரிபாலனம், வியாபாரம் பொருளாதார அபிவிருத்திகள், நீதி பரிபாலனமும் சட்டமும், கல்வி, நாயக்கர் அரசர்கள், தேசிய சமய மறுமலர்ச்சி, சிங்கள இலக்கியம்.

(8) கிழக்கில் ஆங்கிலேயர் ஆதிக்கம் விரிவடைதல். இலங்கைக்கு வருதல், பிரித்தானியரின் கீழ் இலங்கை.

(9) பிரித்தானியர் காலத்தில் அரசியல் அபிவிருத்தி. கோல்புறுக், டொனமூர், சோல்பரி சீர்திருத்தங்கள். இக்காலத்தில் உண்டான பொருளாதார சமூக அபிவிருத்திகள்.

(10) சுதந்திரம் பெற்ற நாடு என்ற முறையில் இலங்கை. அரசியல் அபிவிருத்தி, பொருளாதார சமூக அபிவிருத்தி.

### பகுதி ஆ—இலங்கைப் புவியியல்

**(1) இலங்கை பௌதிகப் புவியியல்**

(அ) பிரதான மேற்பரப்புறுப்புகள்.
(ஆ) வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காலநிலை வகைகள், பருவக்காற்று நாடு முறையில் இலங்கை.
(இ) இயற்கைத் தாவரம்.
(ஈ) பேரியற்கைப் பிரதேசங்கள்.

**(2) இலங்கை பொருளாதாரப் புவியியல்**

(அ) பயிர்ச்செய்கை—ஈரநில, உலர்ந்தநில வேளாண்மை, யாழ்ப்பாணத்துச் சந்தைத் தோட்டங்கள். (பெரிய, சிறிய தோட்டப்பயிர்ச் செய்கை) கைத்தொழில்களுடன் தொடர்புடைய புதுப்பயிர்கள்.

(ஆ) கைத்தொழில்கள்—மீன் பிடித்தல், உள்ளூர் கனி பொருட்களைப் பயன்படுத்தல், மின்சக்தி, பயிர்ச்செய்கையோடு தொடர்புடைய கைத்தொழில்கள்—உதாரணமாக, சீனி, பருத்தி, தேங்காய், றப்பர், மரம், பாற்பண்ணை, குடிசைக் கைத்தொழில் என்பன.

(இ) வர்த்தகம்—கொழும்பைச் சிறப்பாகக் கொண்டு உள்நாட்டுப் போக்குவரத்து, தரை, ஆறு, ஆகாயம், கடற்றுறைமுகங்கள்.

**(3) இலங்கை மக்கட் புவியியல்**

(அ) குடிபரம்பலும் குடியடர்த்தியும், வரண்ட வலயத்தில் அண்மையில் குடிப்பெருக்கம் அதிகமானதற்குரிய காரணங்கள்.

(ஆ) குடியிருப்புகள்—வகைகள் உதாரணமாகக் குளங்கள், ஒன்று சேர்க்கும் மையங்களும் பங்கீட்டு மையங்களும், துறைப்பட்டினம், சந்தைப்பட்டினம், மக்கட் தொழில்கள் அடிப்படையாகக் கொண்ட பேரியற்கைப் பிரதேசங்களிலுள்ள புவியியற் பிரதேசங்கள்.

**6. பரீட்சைக்கு அனுமதித்தல்**

இப்பிரமாணங்களுக்கு இணங்க, விதிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்கும் எல்லாப் பரீட்சார்த்திகளும் எழுத்துப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சார்த்தி ஒருவர் அங்ஙனம் அனுமதிக்கப்பட்டமை அவருடைய தகைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனப் பொருள்படாது. பரீட்சைக்கு முன்போ, அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ, அல்லது அதன் பின்னரோ, அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ அல்லது ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து பயிற்சி பெறும் பொழுதோ, அல்லது பயிற்சி பெற்றதன் பின்னரோ, எப்பொழுதாயினும் இப்பிரமாணங்களுக் கிணங்க, தகைமையற்றவரெனத் தீர்மானிக்கப்படும் பரீட்சார்த்தியினது பரீட்சார்த்தித் தகைமை நீக்கப்படும். அத்தகைய பரீட்சார்த்தியினாற் பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திரமும் நீக்கப்படும். நேர்மையீனமாக நடந்து கொண்டதாகக் காணப்படும் பரீட்சார்த்திக்கு ஈவிய காலம் வரை கற்பித்தற்றொழிலிற் பிரதேசிப்பதற்கான எந்தப் பரீட்சைக்காவது தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

**7. விண்ணப்பப் பத்திரம்**

(i) இவ்விளம்பரத்திற் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கிணங்கப் பரீட்சார்த்தியினால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். **அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் இப்பகுதியினால் வழங்கப்படமாட்டா.**

(ii) விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரிக்கையில் பின்வரும் தேவைகளைக் கட்டாயமாகக் கவனித்தல் வேண்டும். அவற்றில் எதையேனும் அலட்சியம் செய்யின் விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படும் :—

(அ) விண்ணப்பப் பத்திரம் 8″ × 13″ அளவுள்ள புல்ஸ்காப் கடதாசியின் பாதித் தாளில் கட்டாயமாகத் தயாரிக்கப்படவேண்டும். வேறு தாள்களில் தயாரிக்கப்படல் ஆகாது.

(ஆ) விண்ணப்பப் பத்திரம் ஒரு தட்டெழுத்து யந்திரத்தில் தயாரிக்கப்படலாம். கையால் தயாரிப்பதாயின் கோடுகள் சிவப்புமையினால் வரையப்படல் வேண்டும். கூடுகளை நிரப்புதல் நீல அல்லது கறுப்புமையினால் செய்யப்படல் வேண்டும்.

(இ) கூடுகள் கோடுகளிடப்பட்டு, தாளின் சரியான பக்கத்தில் இருத்தல் வேண்டும். எந்தக் கூடும் மாற்றப்படவோ அல்லது தவிர்த்து விடப்படவோ கூடாது. தாளில் கூடுகளுக்குப் புத்தியாகப் போதிய இடம் விடப்படல் வேண்டும். நெருக்கமாக எழுதுதலும், வெட்டி வெட்டி எழுதுதலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பப் பத்திரங்கள் பரீட்சார்த்திகளினால் பூரணமாகவும் திட்டவட்டமாகவும் நிரப்பப்படல் வேண்டும். பூரணமாக நிரப்பப் படாத ஒரு விண்ணப்பப் பத்திரம் அதனுடைய தகைமைகளின் பேரில் தீர்மானிக்கப்பட்டுப் பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்படலாம் அல்லது பரீட்சார்த்தித் தகைமை பரீட்சையின் பின்னர் நீக்கப்படலாம்.

(iv) எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்களுடைய விண்ணப்பங்களைத் தமது பாடசாலை அதிபர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

(v) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 1971 சனவரி 15 ஆம் தேதி அன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சாதிகாரிக்குக் கிடைக்கக் கூடியதாக, பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 என்று விலாசமிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அப்பப்படல் வேண்டும்.

(vi) விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(vii) விண்ணப்பப் பத்திரத்துடன் வேறு எந்தப் பத்திரத்தையும் சேர்த்து அனுப்புதலாகாது.

**8. பரீட்சைக் கட்டணம்**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும், தனது பிரவேச விண்ணப்பப்பத்திரத்தில், ரூபா 20 பெறுமதியான முத்திரைகளை ஒட்டி, அவற்றின்மேல் தனது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு அவற்றைப் பயனற்றவையாகச் செய்தல் வேண்டும். பயனற்றதாக்காமல் அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இககந்தோர் பொறுப்பு ஏற்காது.

**9. விண்ணப்பப் பத்திரங்களை நிராகரித்தல்**

(i) கீழே காட்டப்பட்டிருக்கும் விதத்தில் அனுப்பப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டு அதுபற்றிப் பரீட்சார்த்திகளுக் அறிவிக்கப்படும். அத்தகைய விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பிய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றவியலாதவாறு அவருடைய பரீட்சார்த்தத் தகைமை நீக்கப்படும் :–

(அ) பூர்த்திபற்றவையாகவோ, குறைபாடுள்ளவையாகவோ, இப்பிரமாணங்களுக்கு அமையாதவையாகவோ உள்ள விண்ணப்பப் பத்திரங்கள் ;

(ஆ) விதிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் இல்லாத விண்ணப்பப் பத்திரங்கள் ;

(இ) விண்ணப்பப் பத்திரங்களைப் பொறுப்பேற்கும் கடைசித் தேதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள்.

(ii) விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டால் முத்திரைக் கட்டணம் அரசாங்கத்துக்குரியதாய் விடும்.

**10. கட்டணம் திருப்பிக் கொடாமை**

சுகவீனம் காரணமாகவோ அல்லது வேறு காரணத்தினாலோ பரீட்சைக்குத் தோற்றாமை உட்பட எக்காரணத்தின் பொருட்டும் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதனுடைய பகுதி திருப்பிக் கொடுபடமாட்டாது.

**11. பிரவேசப் பத்திரங்கள்**

(அ) பரீட்சை நடைபெறுதற்கு 7 நாட்களுக்கு முன்பு புதினப்''த்திரிகைகளின் மூலம் பிரவேசப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டமை பற்றிப் அறிவித்தல் கொடுக்கப்படும். எல்லாப் பரீட்சார்த்திகளும் அத்தகைய அறிவித்தலைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அறிவித்தலைக் கண்டதும் அதிற் கூறப்பட்டுள்ள போதனைகளுக்கிணங்க கருமங்களைப் புரிதல் வேண்டும்.

(ஆ) எந்தப் பரீட்சார்த்திக்காவது பிரவேசப் பத்திரம் கிடையாதவிடத்து அவர், தனக்குப் பிரவேசப் பத்திரம் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்து பரீட்சாதிகாரி, பரீட்சைப் பகுதி, மலே வீதி, கொழும்பு 2 (தபாற் பெட்டி இல. 1503, தந்தி முகவரி "பரீட்சை", கொழும்பு) என்ற முகவரிக்கு உடனேயே அறிவித்தல் வேண்டும். தந்தி மூலம் அதனைத் தெரிவிப்பது மிகவும் நல்லது. இயலுமாயின் நேரில் வந்து கொழும்பிலும், ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள 130 ஆம் இலக்கத்தினையுடைய பிரவேசக்கிளையில் தெரிவிக்கலாம். அங்ஙனம் அறிவிக்கும்பொழுதும் கீழே தரப்பட்டுள்ள விவரங்களைத் தெரிவித்தல் வேண்டும் :

(1) பரீட்சையின் பெயர்.
(2) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்.
(3) பரீட்சார்த்தியினது முகவர்.
(4) பரீட்சைக்குத் தோற்றக் கோரிய பரீட்சை இடங்கள்.
(5) விண்ணப்பப் பத்திரம் அனுப்பிய தேதி, அதனைப் பதிவு செய்த தபாற் கந்தோர், பதிவிலக்கம்.

**12. அடையாளப் பத்திரங்கள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் பாடத்துக்கு தோற்றும்போது பரீட்சை மண்டபத்தில் உள்ள அதிகாரியைத் திருப்திப்படுத்தத் தக்கதாக தாம் இன்னாரென்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களுள் ஒன்று அங்கீகரிக்கப்படும் :—

(அ) தபாற் பகுதித் தலைவர் அளிக்கும் அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை நிகழும் தேதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் அளிக்கப்படதும் உறுதியுள்ளதுமான வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச்சீட்டு ;

(இ) பரீட்சை நிகழும் தேதிக்கு மூன்று வருடங்களுக்குள் அரசாங்கப் பகுதியான்றின் அதிகாரத்தால் அல்லது சட்டப்படியுள்ள நிறுவனத்தால் அளிக்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டதுமான பத்திரம், உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்திரம் ;

(ஈ) தமது புகைப்படத்தைக் கொண்ட ஆசிரிய தராதரப் பத்திரம் ;
(ஆசிரியருக்கு மாத்திரம்).

(உ) "பாஸ்போட்" அளவினதான ஒரு புகைப்படம், கையொப்பப் படிவத்தை உறுதிப்படுத்தும் தகைமையுள்ளவர் இப்புகைப்படத்தின் பின்புறத்தில் பின்வருமாறு உறுதிப்படுத்துதல் வேண்டும் :—

இதிற் கையொப்பமிட்ட....................என்பவரின் படமே இப்புகைப்படமென உறுதிப்படுத்துகிறேன்.
(பரீட்சார்த்தியின் முழுப்பெயர்)

....................
(பரீச்சார்த்யின் கையொப்பம்)

............................
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்)

பெயர் : ....................................

பதவி : ....................................

திகதி : ........................

மேற்கூறப்பட்ட எவையேனும் ஓர் அடையாளச் சீட்டைக் கொண்டுவராத பரீட்சார்த்தியின் பரீட்சைத் தகைமை தற்காலிகமானது. அத் தகைமை பரீட்சார்த்தியின் விசனின்படி நீக்கப்படலாம்.

**13. அத்தாட்சிப் பத்திரங்கள் முதலியவை**

(i) வயது, பெயர் முதலியன வேறாயின் அதுபற்றிய சத்தியக் கடதாசி, கல்வித்தகைமை, சேவை விவரங்கள், நற்சாட்சிப் பத்திரங்கள், தேவையாயின் நகரவாசி என்பது முதலியவற்றை ஏற்றுக்கொளுதற்காக அத்தாட்சிப் பத்திரங்களையும் தராதரப் பத்திரங்களையும் தயாராக வைத்திருத்தல் வேண்டும். அவற்றையோ அன்றேல் அவற்றின் பிரதிகளையோ விண்ணப்பப் பத்திரத்தோடு சேர்த்து அனுப்புதலாகாது.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதற்குத் தோற்றும் பொழுது அத்தாட்சிப் பத்திரங்கள் முதலியவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாற்றஞ் செய்யப்பட்ட, அல்லது கள்ளமாகப் பெற்ற, அல்லது பொய்யான விவரங்களடங்கிய அத்தாட்சிப் பத்திரங்களை அல்லது தராதரப் பத்திரங்களை அனுப்பினால், அவர்கள் பரீட்சையிலிருந்து விலக்கப்படுவதுடன், கற்பித்தல் தொழிலில் பிரவேசிப்பதற்கான எப்பரீட்சைக்கும் சீவியகாலம்வரை தோற்றமுடியாதவாறு தடுத்து வைக்கவும்படுவர்.

**14. பெறுபேறுகள்**

பெறுபேறு பற்றி அறிவிக்கப்பட்டமாட்டாது. பயிற்சிக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுத்தல் மகா கல்வியதிபதியினுடைய வேலையாகும்.

**15. பயிற்சி**

(i) பயிற்சிபெறும் காலம் பொதுவாக இரண்டு வருடங்களாகும்.

(ii) சிங்கள/தமிழ் சாதாரண பாடசாலைகளிற் பிரவேசிப்பதற்குப் போட்டியிடும் I ஆம் தராதரப் பத்திரமுடைய பரீட்சார்த்திகளில், பரீட்சையில் அதிகம் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுள் ஒரு குறிப்பிட்ட தொகையினர் மட்டும் ஒரு வருடப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர். ஏனைய I ம் தராதரப் பத்திரமுடையவர்கள் 2 வருடப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர், இப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்தினத் தன்று பயிற்றப்படாத I ஆம் தர ஆசிரியத் தராதரப் பத்திரத்தை உடையவர்கள் அல்லது பயிற்றப்படாத I ஆம் தர ஆசிரியத் தராதரப் பத்திரம் பெறத் தகுதியடைந்தவர்கள் மாத்திரமே ஒரு வருடப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பயிற்சிக் காலத்தின்போது வேறு எந்தப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**16. ஆசிரிய கலாசாலையில் சேர்தல்**

(i) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கலாசாலையில் அனுமதிக்கும் முதனாளன்றே பெறுமதியுள்ள உறுதிப் பத்திரம் (Bond) ஒன்று தயார் செய்வதற்கு வேண்டிய சகல பத்திரங்களையும் பூர்த்திசெய்து கலாசாலை அதிபருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

பின்வரும் விஷயங்கள் சம்பந்தமாகப் பரீட்சார்த்தி உறுதியளித்தல் வேண்டும் :—

(அ) பயிற்சிக் காலத்தில் அரசியல் விடயங்களில் பங்குபற்ற மாட்டாரென்றும் ;

(ஆ) பயிற்சிக் காலத்தில் பயிற்சியை விட்டு விலக்கமாட்டாரெனவும் ;

(இ) பயிற்சிக் காலம் முடிந்ததும் அரசாங்க, அல்லது கல்வி அதிகாரியின் முகாமையின் கீழுள்ள, அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனித் தியங்கும் பாடசாலையில் தொடர்ந்து 8 வருட காலத்திற்குச் சேவை செய்வாரெனவும் ;

(ஈ) தனிப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், அதே முகாமையின் கீழுள்ள பாடசாலைகளில் அல்லது அரசாங்க பாடசாலைகளில், அவ்வண்ணம் 8 வருட காலம் சேவை புரிவதாக, இத்திணைக்களத்துடன், ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும்.

(உ) மேற்குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒரு பரீட்சார்த்தி படிப்புக்காகிய விடுமுறை எடுக்கவோ அல்லது வேறு பதவிகளுக்கு விண்ணப் பிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாரெனவும் அத்துடன் பெறுமதியுள்ள உறுதிப் பத்திரத்தின் (Bond) நிபந்தனைகள் எல்லா வற்றிற்கும் அக்கால எல்லைக்குள் அமைந்து நடப்பாரெனவும் ;

(ஊ) மேற்குறித்த பயிற்சிக்கால எல்லைக்குள்ளும் பயிற்சி முடிந்தபின் அவருடைய கட்டாய சேவை 8 வருட கால எல்லைக்குள்ளும் ஒரு பரீட்சார்த்தி சேவையை விட்டு விலகவேண்டுமானால் பெறுமதிப்பத்திரத்தின்படி முழுப் பணமும் செலுத்தியபின் முற்றாக ஆசிரிய சேவைப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளல் வேண்டும்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2, 1970 ம் ஆண்டு டிசெம்பர் மீ 10 ந உ.

கே. ரீ. டபிள்யூ. சமணசூரிய,
பரீட்சாதிகாரி.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

## இலங்கை பரீட்சைப் பகுதி

### ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை, (சாதரணப் பயிற்சி) சிங்களம்/தமிழ்—1971

| | | |
|---|---|---|
| 1. முழுப்பெயர் :————. பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் பதிவு செய்யப்பட்ட பெயரைக் குறிப்பிடல் வேண்டும். ஏனையோர் பிறப்புச் சாட்சிப் பத்திரத் திலுள்ள பெயரைக் குறிப்பிடல் வேண்டும். | (அ) வழமையான கையொப்பம் :————.<br>(ஆ) சாதாரண பெயர் : ————.<br>முதலெழுத்துக்களுடன்)<br>(மதகுரு/திரு./திருமதி/செல்வி எனக்குறிப்பிடுக)<br>(இ) எல்லா முழுப் பெயரும் :————. | 2. விரும்பும் பரீட்சை இடம்:<br>1 ஆவது தெரிவு :———<br>2 ஆவது தெரிவு :——— |

3. நீர் பிறந்த அல்லது 1968.1.1 தொடக்கம் இன்றுவரை **தொடர்ந்து** வசித்துவந்த மாவட்டம் (டிஸ்திறிக்) :———— வாக்காளர் தொகுதி :————.

4. அ. சேரவிரும்புவது :

*(i) ஒரு வருடப் பயிற்சி :————.

(ii) இரு வருடப் பயிற்சி : ————.

*பொருத்தமற்றதை வெட்டிவிடுக.

4. ஆ. உமது ஒவ்வொரு பிரிவிலும் உமக்குப் பொருத்தமானவற்றை வெட்டி விடுக.

| i | ii | iii | iv |
|---|---|---|---|
| ஆண், பெண் | நீர் விரும்பும் பயிற்சி | ஆசிரியத் தரம் | **சமயம்** |
| ஆண்<br><br>பெண் | சிங்களம்<br>தமிழ்<br>முஸ்லிம் தமிழ் | I ஆம் தரம்<br><br>மாணவ ஆசிரியர்<br>ஏனையோர் | பௌத்தம்<br>இந்து<br>கிறிஸ்தவம்<br>(றோ. க./றோ. க. அல்லாதது)<br>இஸ்லாம் |

| (V) சேவை (சேவையிற் சேர்ந்த காலம் தொடக்கம்) | பாடசாலையின் பெயரும் முகவரியும் | அரசாங்க பாடசாலையா, கல்வி அதிகாரியின் முகாமையி லுள்ள பாடசாலையா, அங்கீகரிக்கப்பட்ட தனித்தியங்கும் பாடசாலையா, தோட்டப் பாடசாலையா, பிரிவெனா பாட சாலையா என்பதைக் குறிப்பிடுக | நியமனத் திகதி | விலகிய அல்லது மாற்றம் செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

5. பிரவேசப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :————. பாடசாலை முகவரி :————. சொந்த முகவரி :————.

6. வயது—1972 ஜனவரி 1 ஆம் தேதியன்று வயது : வருஷம் :————. மாதம் :————.

7. கல்வித் தகைமை : (i) மேலே 4 (iii) இல் கூறப்பட்ட தராதரப் பத்திரம் இருப்பின், பரீட்சை நடைபெற்ற வருடம் :————. தராதரப் பத்திர இலக்கம் :————.

(ii) தராதரப் பத்திரம் இல்லாவிடின், நியமனத் தேதி :————.

8. **பரீட்சைக் கட்டணம்**

**கவனிக்க.**—ரூபா 20 பெறுமதியான முத்திரைகளை ஒட்டி, பரீட்சார்த்தி தனது கையொப்பத்தையும் திகதி யையும் இட்டு, அவற்றைப் பயனற் றவையாகச் செய்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன்மேல் ஒன்றாக ஒட்டுதலாகாது.

9 ஆம், 10 ஆம் கூடுகள் மறுபக்கத்தில் இருத்தல் வேண்டும்.

**9. பரீட்சார்த்தியின் உறுதியுரை**

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையென உறுதி கூறுகின்றேன். இதில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் என்னுல் ஒட்டப்பட்டவையெனவும், அவை இதற்கு முன் உபயோகிக்கப்படாதவையெனவும், வழக்கிலுள்ள நல்ல முத்திரைகளெனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன். பரீட்சாதிகாரியினுல் வெளியிடப்பட்டுள்ள இப்பரீட்சை சம்பந்தமான பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கட்டுப்பட வேண்டிய நிபந்தனைகளுக்கும் இணங்கி நடப்பதற்கு இத்தால் ஒப்புக்கொள்கின்றேன். பரீட்சை தேதியிலன்று ஓர் அடையாளப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதையும் யான் அறிவேன்.

———————,

தேதி :—————. பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**10. பாடசாலைமுதல்வரின் அத்தாட்சிப் பத்திரம்**

1. இப்பரீட்சார்த்தி இப்பாடசாலையில் உதவி/தலைமை ஆசிரியர் ஆவார் எனவும்,
2. ————— தேதியிலிருந்து இப்பாடசாலையில் தொடர்ந்து திருப்திகரமாகச் சேவை செய்து வருகின்ருர் எனவும்,
3. —————தராதரப் பத்திரம் பெற்ற ஓர் ஆசிரியர்/மாணவ ஆசிரியர்/ஆசிரியர் தராதரப் பத்திரமற்ற, மாணவ ஆசிரியரல்லாதவர் எனவும்,
4. பரீட்சார்த்தி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

———————, ———————,

பரீட்சார்த்தியின் கையொப்பம். தேதி :—————. பாடசாலை முதல்வரின் கையொப்பம்.

பாடசாலை முதல்வரின் உத்தியோக முகவரி :

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

## பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சார்த்தியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடத்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்தில் இருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவார்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டுபோதல் கூடாது. அத்தகைய விடையெழுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக்கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வேளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியுனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே

எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றிேனாடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசி கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்லப் பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால், குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

